# குமுத வாசகம்

படிவம்—உ


(சிறப்புப் பகுதி)

வித்துவான் பாலூர். கண்ணப்ப முதலியார்

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ்
சென்னை-1.

[விலை அணா 8

# குமுத வாசகம்



டி.வி.செல்லப்ப சாஸ்திரி ஸன்ஸ்
சென்னை-1.

# குமுத வாசகம்

இரண்டாம் படிவம்

(சிறப்புப் பகுதி)

ஆசிரியர்
வித்துவான், பாலூர். கண்ணப்ப முதலியார்
தலைமைத் தமிழ் ஆசிரியர்
கெல்லட் உயர்நிலைப் பள்ளிக்கூடம்,
திருவல்லிக்கேணி, சென்னை

வெளியிட்டவர்
டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்
சென்னை

உரிமை பதிவு] 1951 [விலை அணா 0—8—0

First Edition November, 1951.

T. V. C. Press, Madras.

# முன்னுரை

'குமுதவாசகம்' என்னும் பெயருடன் வெளி வந்துள்ள இந்நூல், சென்னை அரசியலார் புதிதாக வெளியிட்டுள்ள 1951 பாடதிட்டத்தின்படி எழுதப்பட்டுள்ளது. இது எல்லா மாணவர்களும் படித்தற்குரிய சிறப்புப் பகுதியை மட்டும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது.

இலக்கணப் பாடத்தைத் தனித்துப் பயில்கையினும், உரைநடைப் பாடத்தோடு தொடர்ந்து பயிலின், அப் பாடத்தில் ஓர் உணர்ச்சியும் ஊக்கமும், தோன்றும் எனக் கருதி, ஒவ்வோர் உரைநடைப் பகுதியின் கீழும் இலக்கணப் பாடம் எழுதப்பட்டு இருப்பது, மாணவர்கள் தம் தமிழ் அறிவைச் செம்மையுடன் பெறப் பெருந்துணையாகும் என்பதில் ஐயமில்லை.

அறிவு வளர்ச்சிக்குரிய பல திறப்பாடங்களும், ஒவ்வொரு பாடத்தின் முடிவினும் வினாக்களும், பயிற்சியும், வேண்டிய அளவுக்குக் குறிப்புரையும் இந்நூல் தன்கண் கொண்டிருத்தலால், "பொன்மலர் நாற்றம் உற்றாற்போல்" மாணவர்கள் ஆயாசம் இன்றிப் பாடங்களை நன்கு உணர்ந்து, தம் மனத்தில் பதியவைத்துக் கொள்வர் என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம்.

இந்நூலில் காணும் பாடல்கள் சிலவற்றை இதில் இணைத்துக் கொள்ளத் தம் இசைவைத் தெரிவித்த உரிமையாளர்கட்கு என் நன்றியுள்ள வணக்கம் உரித்தாகுக.

இந்நூலைத் தமிழ் உலகம் ஏற்று, என்னை ஆதரித்து ஊக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

'அம்மையப்பர் அகம்'<br>
77, அவதானம் பாப்பையர் தெரு,<br>
சூளை, சென்னை.<br>
5—11—'51

இங்ஙனம்<br>
பா. து. க.

# உள்ளுறை

## உரைநடை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கங்கை கொண்ட சோழபுரம் | ... | 121 |
| 2. | இராணி மங்கம்மாள் | .... | 126 |
| 3. | முல்லை நிலம் | ... | 134 |
| 4. | பாரியும் பேகனும் | ... | 140 |
| 5. | குடிசைத் தொழில் | ... | 147 |
| 6. | தெய்வத் திருவருள் | .... | 154 |
| 7. | ஒட்டக்கூத்தரும் புகழேந்தியாரும் (நாடகம்) | | 163 |


## செய்யுள்


| | | | |
|---|---|---|---|
| I. | நீதிப்பாக்கள் | .... | 172 |
| II. | ரூபாயின் கதை (கும்மி) | .... | 178 |
| III. | தனிப்பாடல்கள் | .... | 181 |

# சிறப்புப் பகுதி

# 1. கங்கை கொண்ட சோழபுரம்


1. முடியுடை வேந்தர்களுள் சோழர்களும் ஒருவர். அவர்கள் தம் அரசியலை இனிது நடத்துதற்குச் சிற்சில இடங்களைத் தலைநகரமாகக் கொண்டனர். அவற்றுள் ஒன்றே கங்கை கொண்ட சோழபுரம் என்பது. இந்தக் கங்கை கொண்ட சோழபுரம் திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார் பாளையம் தாலுக்காவைச் சார்ந்தது.

2. கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலை நகரமாக அமைத்துக் கொண்டவன் முதலாம் இராசேந்திரன் ஆவான். இவன் இராஜராஜ சோழனது திருமகன். இவன் அரசியலை நடத்திய காலம் கி. பி. 1014 முதல் 1042 ஆண்டு வரையாகும். கங்கை கொண்ட சோழபுரம் கங்காபுரி, கங்கைமாநகர், கங்காபுரம் என்றும் கூறப்பெறும். முதலாம் இராஜேந்திரன் காலத்தில் இந் நகர் நான்கு மைல் சதுரப் பரப்புடையது.

3. முதலாம் இராஜேந்திர சோழன தன தந்தையார் தஞ்சையில் கட்டிய பிரகதீஸ்வரர் ஆலயம்போலவே தானும் ஓர் ஆலயம் எடுக்க எண்ணம் கொண்டான். அந்த எண்ணத்தை முடித்தும் வைத்தான். கோயிலைக் கட்டி அதனைக் கங்கை கொண்ட சோழேச்சுரம் என்று பெயரையும் ஈந்தான். சுவாமியின் பெயரை மட்டும் மாற்றவில்லை. தஞ்சைப் பெருவுடையார்க்கு அமைந்த பெயராகிய பிரகதீச்சுரர் என்றும், பெரிய நாயகியாரைப் பிரகந் நாயகி என்றும் பெயர் சூட்டி வழிபட்டு வந்தான்.

4. திருக்கோயிலின் திருமதில் 600 அடி நீளமும், 450 அடி, அகலமும் 4 அடி கனமும் உடையது. முழு

மையும் கற்களால் கட்டப்பட்டதே யாகும். இத்திரு மதிலை அடுத்து இரண்டு அடுக்குத் திருச்சுற்றுமாளிகை அமைந்திருந்தது. ஆனால், இப்பொழுது ஒரு பகுதி மட்டுமே காட்சி அளிக்கிறது. இக் கோயிலின் நீளம்



340 அடியும் அகலம் 110 அடியும் ஆகும். கோயிலுக்குச் செல்லவேண்டின், கிழக்குத் திருவாயில் வழியே செல்ல வேண்டும். உள்ளே சென்றதும் மகா மண்டபத்தைக் காணலாம். அம் மண்டபத்தில் பன்னிரண்டு வாயிற் காவலர் உருவங்கள் காணப்படும். அவற்றின் உயரம் பன்னிரண்டடியாகும்.

5. இம் மகா மண்டபத்தில் அமைந்த சைவ சமய ஆசிரியரான சம்பந்தருடைய உருவமும், துர்க்கையம்மனுடைய வடிவமும் மிக்க வேலைப்பாடுடையவை. இம் மண்டபத்தின் மேற் கட்டியில் நவக்கிரகங்களைப் பொறித்து வைத்துள்ளனர். அவை வேறெங்கும் காணப்படாத புதுமை வாய்ந்தனவாக இங்குக் காணப்படுகின்றன. சூரியனுடைய தேரும், அட்டதிக்குப் பாலகர்களும் அவர்களுக்குமேல் நவக்கிரகங்களும் நடுவில் பதுமபீடமும் ஒரே வட்டக்கல்லில் அமைந்திருக்கும் காட்சி, எவரையும் வியக்கச் செய்யும் தன்மையுடையதாகும்.

6. அர்த்த மண்டபத்துத் தூண்களில் பலவகை நடனச் சிலைகள் செதுக்கப் பட்டுள்ளன. சுவர்களின் மேல் சிற்ப உருவங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. அவையாவும் ஒவ்வொன்றும் பல வரலாறுகளைக்காட்டி நிற்கின்றன. அவை மார்க்கண்டேயர் வரலாறு; சிவபெருமானும் அர்ச்சுனனும் போரிடும் வரலாறு; சண்டேசுவரர் வரலாறு; மீனாட்சி அம்மையார் திருமண வரலாறுகள் ஆகும். அவற்றை நேரே சென்று காணும் போது, அவை உண்மையில் உயிருடன் விளங்கும் சிற்பங்கள் போலவே காணப்படும். இவ்வாறு அமைந்திருப்பது சிற்பியின் நுண்ணறிவுத்திறன் விளக்குவதாகும்.

7. தென் மேற்கில் நடராசர் உருவமும், மேற்கில் அருணாசல ஈஸ்வரர் உருவமும், தெற்கில் விநாயகர் உருவமும், வடக்கில் சண்டேஸ்வரருக்கு இறைவர் முடி சூட்டும் உருவமும் அருமையான வேலைப்பாடுடையவை. இவற்றிற்கு வடப்புறம் கணநாதர் ஆடிப்பாடி மகிழும் சிற்

புறம், இடப்புறம், வேதமாகிய பசுக்கள் நிற்றலும், மற்றும் சில உருவங்களும் இக் கோயிலின் சிற்பத்தின் பெருமையை விளக்கி நிற்பன வாகும்.

8. நரசிம்ம வர்மனால் அமைக்கப்பட்ட மாமல்ல புரச் சிற்பங்களிலும் இவை மேம்பட்டவை என்றும், அவற்றைக் காட்டிலும் எவ்வளவோ அரிய அமைப்புக் களைக் கொண்டவை என்றும், வனப்பிற்கும் தோற்றத் திற்கும்சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்திருக்கின்றன என்றும் சிற்பக்கலை உணர்ந்தவர் செப்புகின்றனர். இந்த இடங்களுக்கெல்லாம் நீங்கள் நேரே சென்று காண்பீர் களானால் உண்மை நன்கு விளங்கும்.

அருஞ் சொற்கள் :

மூவேந்தர் - சேரர், சோழ, பாண்டியர், எடுக்க - கட்ட, நவம் - ஒன்பது, அட்டதிக்கு - எட்டுத்திசை கள், பதுமபீடம் - தாமரை வடிவமான ஆசனம் வியக்க - ஆச்சரியப்பட, சிலை - கல்லுருவம், வனப்பு- அழகு.

கேள்விகள் :

1. கங்கைகொண்ட சோழேச்சுரம் எங்குள்ளது ?
2. இதனை அமைத்தவன் யாவன் ?
3. மண்டபத்தில் அமைந்துள்ள உருவங்கள் எவை ?
4. சிற்ப உருவங்களை விளக்கிக் காட்டும் வரலாறு கள் எவை ?
5. இக்கோயிலில் உருவங்களைக் காணும்போது எந்தச் சிற்பங்களின் நினைவு உண்டாகிறது ?

பயிற்சி :

1. நவக்கிரகங்களையும் அட்டதிக்குப்பாலகர்களையும் குறிக்கும் பெயர்களை முறையே எழுது.
2. சிவன் அர்ச்சுனன் போர், மார்க்கண்டேயன் வரலாறு, சண்டேஸ்வரர் முடிசூட்டிக் கொள்ளுதல்—இவற்றில் அடங்கிய கதைகளை விளக்கமாக எழுது.
3. இக்கோவிலின் அமைப்பு முறையைக் குறிப்பிடு.
4. இக்கோவிலில் இன்னின்ன திசைகளில் இன்னின்ன சித்திரங்களைக்காணலாம் என்பதைக் குறித்து உன் நண்பனுக்குக் கடிதத்தின் மூலம் உணர்த்து.

## இலக்கணம்

### இடைநிலைகள்

செய்தான், உண்டான், கற்றான், பேசினான் இவை எந்தக்கால வினைமுற்றுக்கள்? இறந்தகாலவினை முற்றுக்கள் அல்லவா? இவை இறந்த காலம் என்பதை எவை உணர்த்துகின்றன என்பதை உணர்ந்தீர்களோ? இச்சொற்களின் இடையேயுள்ள த், ட், ற், இன் என்பன அல்லவா? ஆகவே, இவை இறந்த கால இடை நிலைகளாம்.

செய்கிறான், செல்கின்றான், இவை எந்தக்காலத்தை உணர்த்தி நிற்கின்றன? நிகழ்காலத்தைஅல்லவா? அப்படி நிகழ்காலத்தை உணர்த்துவன எவை? கிறு, கின்று என்பன அன்றோ? ஆகவே, இவை நிகழ்கால இடை நிலைகளாம்.

செய்வான், படிப்பான் இவை எந்தக்காலத்தைக் காட்டுகின்றன? எதிர் காலத்தைக் காட்டுகின்றன. அப்

படிக் காட்டும் எழுத்துக்கள் எவை? ப், வ், என்பன அன்றோ? எனவே, அவை எதிர்கால இடை நிலைகளாம்.

பயிற்சி

1. கீழ்வரும் பகு பதங்களில் வந்துள்ள இடை நிலை களை எடுத்துக் காட்டுக.
கொண்டனர், சார்ந்தது, அளிக்கிறது, நிற்கின் றன, விளக்குகிறது, அமைந்திருக்கின்றன, கண்டீர், கூடினீர், விற்றான், காண்பார், உணர்வீர்.

## 2. இராணி மங்கம்மாள்

1. மாணவர்களே! உங்களில் எவரேனும் மதுரை மாநகருக்குச் சென்றதுண்டா? அப்படிச் செல்லவில்லை யென்றால், சென்றுவர எண்ணங் கொள்ளுங்கள். மதுரைமாநகரில் கண்டு மகிழவேண்டிய இடங்கள் பல உண்டு. அவற்றுள் **மங்கம்மாள் சத்திரம்** என்பதும் ஒன்று. இச்சத்திரம் மதுரை இரயில்வே நிலயத்திற்கு எதிரே இன்றும் இருப்பது. மதுரைமாநகரில் இதனை விடப் பெரிய சத்திரம் எதுவும் இல்லையென இயம்பி விடலாம். ஏன்? எவ்வூரிலும் இதனினும் பெரிய விடுதி யைக் காண்பதரிது. இச்சத்திரம் யாரால் கட்டப்பட் டது? எப்பொழுது கட்டப்பட்டது? என்பனவற்றை அறிந்து கொள்ள வேண்டுவது அறிவுடைமை யன்றோ? ஆகவே, அச்சத்திரத்தைக் கட்டுவித்தவரைப் பற்றி இங்கு உணர்வோமாக.

2. மதுரைமாநகர் தொன்று தொட்டுப் பாண்டிய மரபினரால் ஆளப்பட்டு வந்தது. அவ்வாட்சி நீடித்து

நிலைத்து நிற்கவில்லை. செழியர்க்கும், செம்பியர்க்கும் நடந்த போர்க்காரணமாகப் பாண்டி நாடு நாயக மன்னர் கைவசமாயிற்று. அந்நாயகருள் தலைசிறந்த மன்னர் திருமலை நாயகராவார். திருமலை நாயகர் ஆட்சியில் மதுரைமாநகர் பல துறையிலும் முன்னேற்றம் அடைந்தது. இப்பொழுது எவருடைய கண்களுக்கும் பெரு விருந்து அளித்து வரும் மதுரை மீனாட்சியம்மையாரின் கோவில் இத்துணைப் பரந்த அளவுக்குக் கட்டி முடித்தவர் திருமலை நாயகர் என்றால், வேறு என்ன கூற வேண்டும்? இவர் இருந்து அரசு நடத்திய இடமே இப்பொழுது திருமலை நாயகர் மஹால் என்னும் பெயருடன் இலங்குகிறது. இவர் காலத்தில் அரச சபையை அலங்கரித்த புலவர்கள் குமரகுருபரர், காளமேகம், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் முதலியோர்.

3. திருமலை நாயகரின் பேரர் சொக்கநாத நாயகர். இச் சொக்கநாதர் கி. பி. 18 ஆம் நூற்றாண்டில் மதுரை மாநகருக்குத் தலைவராக இருந்து ஆட்சி புரிந்து வந்தார். இவர்க்கு வாழ்க்கைப்பட்டவரே மங்கம்மாள் என்னும் மாதரசியார். சொக்கநாத நாயகர் பல்லாண்டு அரசப் பொறுப்பை ஏற்று ஆட்சி புரிதற்கின்றிச் சில்லாண்டே செங்கோல் செலுத்தி இறந்து போயினர். இதன் பின் சொக்கநாத நாயகரின் திருமகன் பட்டத்திற்கு வந்தனன். அவனும் தரணியை விடுத்து விண்ணுலகடைந்தனன். அவன் ஆட்சி ஏற்று அரசு நடத்திய காலம் ஏழ் ஆண்டுகளேயாம். அவனுக்கு வாழ்க்கைப்பட்ட அருமை மனைவி கற்பொழுக்கம் பூண்ட கட்டழகி. தன் கணவன் இறந்ததும் தனக்கு நில உலகில் வேலையில்லை என்று தீர்மானித்து, அவளும் உடன் கட்டை ஏறி உயிர்விடத் துணிந்தனள்! இங்ஙனம் துணிந்தபோது இவள் பூரண

கர்ப்பவதியாக இருந்தாள். இவள் இறந்தால், இவளு டன் இவள் வயிற்றில் இருந்த சிசுவும் இறக்க வேண்டும். இந்த நிகழ்ச்சி நிகழாதிருக்க முத்தம்மாளின் மாமியா ரான மங்கம்மாளும் மற்றுமுள்ளவர்களும், "குழந்தை யைப் பெற்ற பிறகு உடன்கட்டை ஏறுக" என்று இரந்து வேண்டிக்கொண்டனர். அவர்கள் வேண்டுதல் நியாயமாகக் காணப்பட்டபடியால், அவ்வாறே செய்வ தாக முத்தம்மாளும் ஒவ்வினள். சின்னுட்களுக்குப் பிறகு ஓர் ஆண் மகவை முத்தம்மாள் பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு விஜயரங்க சொக்கநாதன் என்று திரு நாமம் வைக்கப்பட்டது. அக்குழந்தை பிறந்து மூன்று திங்கள் ஆனதும், அதற்கு மதுரைமாநகர் பட்டமும் கட்டப்பட்டது. பட்டங் கட்டிக்கொண்டவர் அரச பாரம் ஏற்று நடத்த வேண்டுமல்லவா? இப்பொழுது பச்சைப் பசும்பாலகன் அரசனுகப்பட்டங் கட்டிக்கொண் டிருக்கிறுன். அவன் எப்படி அரச நிர்வாகத்தை நடத்துவது! அதன் பொருட்டு விஜயரங்க சொக்கநாத னுடைய பாட்டியாராகிய மங்கம்மாள் அப்பொறுப்பை ஏற்று, அச்சிறுவன் அரசாளும் பருவம் அடையும் வரை யில் நடத்துவதாக ஒப்புக்கொண்டு அரசை நடத்தி வந்தனர்.

4. இராணி மங்கம்மாள் அரசினை ஏற்று நடத்தி வருங்காலத்தில் சிற் சில சண்டைகள் நிகழ்ந்தன. நாயக மன்னர் காலத்தில் திருவாங்கூரை ஆண்டுவந்த அரசர்கள் இறை செலுத்தி வந்தனர். மதுரை, நாயகர் சிறுவன் ஆட்சிக்குட்பட்டுப் பெண்ணொருத்தியினுல் ஆளப்பட்டு வருகின்றது என்ற காரணத்தால் கப்பம் செலுத்த மறுத்தனர் திருவாங்கூர் ஆட்சியாளர். இதுகண்டு உள்ளங் கொதித்த இராணி மங்கம்மாள், பலபோர்வீரர்

கள் அடங்கிய ஒரு படையினை விடுத்தனர். திருவாங் கூர் அரசன் படையெழுச்சி கொண்டு வந்த வீரர்களைத் தன் வயமாக்கிக் கொண்டு, அவர்களின் உதவி கொண்டு அமைச்சர்களை அடக்கித் தானைகளையும் அழித்தனன். ஆனால், போரில் கலந்து கொண்டவர் அனைவரும் மடிந் திலர். ஒரு சிலர் உயிர் தப்பி ஓடிவந்து நடந்த செய்தி கள் அனைத்தையும் அரசியாரான மங்கம்மாளுக்கு அறி வித்தனர். இந்த மொழிகளைக் கேட்ட வீரமங்கைய ராம் இராணி மங்கம்மாளுக்கு எரியும் கொள்ளியை ஏற விட்டதுபோல் காணப்பட்டது. அடக்க ஒண்ணுச் சீற் றம் கொண்டனர். "எவ்வாறேனும் அத் திருவாங்கூர் மன்னனை முறியடித்தே தீர்வேன்" என்று உறுதி கொண் டார். "எண்ணியார் எண்ணியாங் கெய்துவர் எண்ணி யார் திண்ணிய ராகப் பெறின்" என்பது பொய்க்குமோ? உடனே தம் தானைத் தலைவர் நரசப்பையர் என்பவரை அழைத்து மற்றொரு பெருஞ் சேனையைஉடன்கொண்டு சென்று திருவாங்கூர் மன்னன் புறமுதுகு காட்டுமாறு போர் புரிந்து திறையினைப் பெற்று வருமாறு ஆணையிட் டனர். சேனைத் தலைவர் நரசப்பையர் அரசியார் கட்டளை யைச் சிரமேற்றாங்கிப் பெரும் படையுடன் சென்று சிற்றரசனைத் தாக்கினர். திருவாங்கூர் நிருபன் சேனை கள் நரசப்பையர் எதிர் நிற்க ஆற்ருது, பரிதியினைக் கண்ட பனிபோல் ஓடிச் சென்றன. திருவாங்கூர் மன் னன் அதற்குமேல் ஒன்றும் செய்தற்கின்றிப் பணத்தைக் கொடுத்தனுப்பினன். தம் படைவீரர் வெற்றித் திரு வுடன் மீண்டுவந்ததைக் கண்டு, மங்கம்மாளும் மகிழ் வுற்றனர். இவ்வாறே தஞ்சை மன்னருக்கும் இவ் வம்மையாருக்கும் சமர் விளைந்தது. அச் சமரிலும் வெற்றித்திரு மங்கம்மாள் சார்பில் குடிகொண்டிருந்த

னால், தஞ்சை மன்னர் தளர்ந்து தம் தோல்வியை ஒப்புக் கொண்டு திறைப்பொருள் ஈந்து நண்பராயினர்.

5. 'வெற்றியும் தோல்வியும் ஒருவர் பங்கல்ல' என்பதும் ஒரு முதுமொழியே. தோல்வி நிகழ்ந்த இடத்தில் அடுத்தாற்போல் வெற்றிநிகழும். வெற்றி நிகழ்ந்த இடத்தில் தோல்வி தோன்றும். இஃது உலக இயற்கை. மேலும் அரசமரபினர் போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்னும் பழமொழிக்குப் புறம் பானவர்கள். அவர்கட்கு அகிலமெல்லாம் கட்டியாளி னும் கடல்மீதிலே ஆணைசெலவே நினைவர். இந்த முறைப்படி இராணி மங்கம்மாள் தமக்கு அண்மையில் இருந்த சேது ஸமஸ்தானமும் தமக்கு அடங்கிக் கப்பம் செலுத்த வேண்டு மென்பதற்காக அதனோடு போர் தொடுக்க எண்ணங் கொண்டார். சேதுபதி படைபலம் கொண்டவன். மங்கம்மாள் படையோ குறைவு உடை யது. அது திருவாங்கூர் மன்னரோடு பொருதபோது சில வீரர்களை இழந்து விட்டது. என்றாலும், இராணி யார் தஞ்சை மன்னனின் படைத்துணை கொண்டு சேது பதியை எதிர்க்கத்தம் தானைத்தலைவர் நரசப்பையருக்குக் கட்டளை யிட்டனர். அக்கட்டளை பெற்றுச் சென்ற சேனைத் தலைவர் போர் தொடுத்தும் சேதுபதியின் சேனையே வெற்றி கொண்டது. நரசப்பையர் போர்க் களத்தில் உயிர்கொடுத்துப் புகழ் பெற்றார். இச்செய்தி மங்கம்மாளுக்கு எட்டவே, இவ்வம்மையாரது ஊக்கமும் எழுச்சியும் அடங்கிப் போயின. தானைத்தலைவர் மரணம் அம்மையார் மனத்தை உருக்கியது. தம் நாட்டுக்கே ஒரு பெரும் நட்டம் ஏற்பட்டதாக எண்ணி ஏங்கினர்.

6. மங்கம்மாள் அரசப்பொறுப்பை ஏற்று நாட்டைக் காவல் புரிந்த காலம் மிகக் குறைவேயானாலும், அக்

ருந்த காலத்தில் இவ்வம்மையார் நாட்டு மக்களுக்காகச் செய்த நலன்கள் பலவாகும். உள் நாட்டு மக்களும், வெளி நாட்டு மக்களும் யாத்திரை செய்யும் காலத்தில், இடைவழியில் தங்கி இளைப்பாறிச் செல்லும் பொருட்டுப் பல அன்னசத்திரங்களை அமைத்தனர். மக்கள் நடமாட்டத்திற்கும் வண்டி போக்கு வரவிற்கும் இன்றியமையாதனவானசாலைகள்பலவற்றைநல்லமுறையில் அமைத்தனர். சாலையோரங்களில் நிழல் தரும் மரங்களை வளர்ப்பித்தனர். சுமை எடுத்துச் செல்பவர் சுமைகளை இறக்கித் தலைபாரத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுச் சுமைதாங்கிகளைக் கட்டி வைத்தனர். சாலைக் கிணறு, சாலைத்தடம் முதலியவற்றை வெட்டுவித்தனர். இவ்வம்மையார் அரசு புரிகையில் கள்ளர் பயம் தீயர் தொந்தரவு நாட்டில் இல்லாமல் இருந்தன. அவர்கள் சட்டமீறி நடந்து கொண்டதாகத் தெரியவந்ததும், உடனுக்குடன் ஒறுக்கப்பட்டனர்; சிறைக்கூடம் செலுத்தப்பட்டனர். நகர சோதனை வருதல் பாண்டி நாட்டுக்குச் சிறப்பாதலின், இவ்வம்மையார் மாறு வேடம் பூண்டு இரவில் சுற்றி வந்தனர். தம்மைப் பற்றியும், தம் அரசு பற்றியும் நாட்டு மக்கள் என்ன பேசிக் கொள்கின்றனர், என்பதற்கும் திருடர்களை அறிதற்கும் இந்த முறையைக் கைக் கொண்டனர். இவ்வம்மையார் புகழை விளக்கிக் கொண்டு இருப்பதாகத் துவக்கத்தில் சத்திரத்தைச் சான்றாகக் காட்டினோம் அல்லவா? இது போலவே இவரால் ஏற்படுத்தப்பட்ட சாலைகள் மங்கம்மாள் சாலை என்னும் பெயருடன் இன்றும் நிலைத்திருக்கின்றன. இவ்வம்மையாருடைய அரண்மனையின் எஞ்சிய பகுதிகளே இப்பொழுதும் அரசாங்க அலுவலகங்களாக விளங்குகின்றன. இவ்வம்மை

யாருடைய வாழ்க்கை வரலாறும், அரசியல் முறையும் முறையேபெண்கள் சமூகத்திற்கும் அரசியலாளர்கட்கும் சிறந்த வழிகாட்டிகள் என்பதில் ஐயமுண்டோ?

அருஞ் சொற்கள் :

மா - பெரிய, இயம்பி - சொல்லி, அரிது - கடினம், விடுதி - சத்திரம், செழியர் - பாண்டியர், செம்பியர் - சோழர், விருந்து - புதுமை, இலங்குகிறது - விளங்குகிறது, தரணி - பூமி, விண்ணுலகடைந்தனன் - இறந்தனன், கட்டழகி - பேரழகுடையவள், உடன்கட்டை ஏறுதல் - கணவன் இறந்ததைப் பொறுக்க இயலாத கற்புடைய மாதர் உடன் இறத்தல், இரந்து - கெஞ்சி, ஒவ்வினர் - சம்மதித்தனர், மகவு - பிள்ளை, திருநாமம் - அழகியபெயர், திங்கள் - மாதம், நிர்வாகம் - பொறுப்பு, திறை - கப்பம், தானை - சேனை, அமைச்சர் - மந்திரிமார்கள், சீற்றம் - கோபம், திண்ணியர் - மனஉறுதிபடைத்தவர், நிருபன் - மன்னன், ஆற்றாது - இயலாமல், பரிதி - சூரியன், சமர் - போர், வெற்றித்திரு - ஜயலட்சுமி, சார்பில் - பக்கத்தில், தஞ்சை - தஞ்சாவூர், முதுமொழி - பழமொழி, புறம்பானவர் - வேறானவர், அகிலம் - உலகம், ஆணை - அரச அதிகாரம், அண்மை - அருகில், நட்டம் - நஷ்டம், அரியாதனம் - சிம்மாதனம், தடம் - குளம், எஞ்சிய - மிகுந்த, அலுவலகம் - வேலைசெய்யும் இடம், எடுத்துக்காட்டு - உதாரணம், ஒறுக்கப்பட்டனர் — தண்டிக்கப்பட்டனர்.

கேள்விகள் :

1. மங்கம்மாள் யார்? இவ்வம்மையார் எப்படி அரசு ஏற்கநேர்ந்தது?

2. இவ்வம்மையார் அரசு செய்கையில் குடிமக்கள் நலத்தின் பொருட்டுச் செய்த நன்மைகள் எவை ?
3. இவ்வம்மையாரின் படைத்தலைவர் யார் ? அவர் யார் யாரை எதிர்த்தனர் ?
4. இப்படைத் தலைவர் எப்பொழுது உயிர் கொடுத்துப் புகழ் கொண்டார்?
5. மங்கம்மாள் எப்பொழுது தம் அரசபதவியி லிருந்து விலகநேர்ந்தது ?

பயிற்சி :

1. மங்கம்மாள் சத்திரம், திருமலைநாயகர் மகால் பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்—சிறு குறிப்புத் தருக.
2. நாயகர் மன்னர் ஆட்சியில் மதுரை அடைந்த சீர்திருத்தங்கள் யாவை ?
3. மங்கம்மாவைப் போன்று அரசியலை மேற் கொண்டு நடத்திய ஒரு மாதரசியாரை எடுத்துக் காட்டி அவ்வம்மையார் வரலாற்றையும் எழுது.

இலக்கணம் :

## விகுதி

வந்தான், வந்தாள், வந்தனர், வந்தது, வந்தன, - என்னும் சொற்களில் ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன்பால், பலவின் பால்கின்ன என்பதை எப்படி அறிகிறோம்? இவற்றின் ஈற்று உறுப்பாகிற ஆன், ஆள், அர், து, அ, என்பன வற்றால் அன்றோ? ஆகவே, இவ் வீற்று உறுப்பு விகுதிஎனப்படும். விகுதிகள் எப்பொழுது ஈற்றில்தாம் வரும். விகுதிகள் பல உண்டு. அவற்றைக் கேட்டு அறிக. அவை பெயர்ச் சொல்லிலும் வரும்; வினைச் சொல்லிலும் வரும்.

பொன்னன்—அன்<br>கோமான்—மான் } பெயர் விகுதிகள்.

செய்தான்—ஆன்<br>வந்தவை—வை } வினை விகுதிகள்

பயிற்சி :

1. கீழ்வரும்பகுபதங்களில் காணப்படும் விகுதிகளை எடுத்துக்காட்டி இன்ன விகுதியெனவும்குறிப்பிடு, மாணவர்கள் கட்டப்பட்டது, உணர்வோம் மன்னர், கண்கள், புலவர்கள், வந்தார், போயினர், அடைந்தனன், துணிந்தான், எறுக, வேண்டிக் கொண்டனர், ஓவ்வினன், இருக்கிறான், வந்தனர், நிகழ்ந்தன.

# 3. முல்லை நிலம்

1. தமிழ் மக்கள் சோம்பி இராதவர். என்றும் சுறுசுறுப்புடையவர்கள். காடுகளாக இருக்கின்ற இடத்தையும் காடாயிற்றே என்று அங்கு வாழ அஞ்சுகின்றவர்கள் அல்லர். அவ்விடங்களையும் வாழ்தற்குரிய இடமாக அமைத்துக்கொண்டவர்கள். அந்த நிலத்தை முல்லை நிலம் என்று பெயர் கொடுத்துக் கொண்டவர்கள். முல்லை நிலமாவது காடும் காட்டைச் சார்ந்த இடமாகும்.


2. இந்த முல்லை நிலத்தில் குல்லைமலர், முல்லை மலர் தோன்றிப்பூ, பிடவம்பூ, கொன்றைப்பூ, காயாம்பூ குருந்த மலர் மிகுதியாக வளர்ந்து இயற்கை எழிலையூட்டிக்கொண்டிருக்கும். குருந்த மலரின் மணம் தொலைதூரம் வீசி வழியே செல்வோரையும் "வா" என்று

அழைப்பதுபோல் தோன்றும். தோன்றிமலர் தன்னிடம் அமைந்த நிறத்தால், காண்பவர் உள்ளத்தை மகிழச் செய்யும். பிடவம்பூ நன்கு மலர்ந்து இன்பமூட்டும். இத்தகைய இயற்கை எழிலுடன் முல்லை நிலத்தை வளர்ப்பர் அங்கு வாழ்பவர்களேயாவார்.

3. முல்லை நிலத்தில் யார் வாழ்பவர் என்று உங்கட்குக் கூறவில்லையல்லவா? அவர்கள் இடையர், ஆயர் என்னும் பெயரால் குறிக்கப்படுபவர். இவர்களுள் பெண்பாலராய் இருப்பவர் இடைச்சியர், ஆய்ச்சியர் எனப்படுவர். இவர்கள் ஏழ்மை வாழ்வு வாழ்பவர். இவர்களுள் சிறந்து சிறக்க வாழ்பவர், குறும்பொறை நாடன் தோன்றல், என்று குறிக்கப்படுவர். இவர்களுக்கேற்ற சிறப்புடைய மாதர் கிழத்தி, மனைவி என்று வழங்கப்படுவர். இப்பிரிவு அவர் அவர் செல்வநிலைக்கு ஏற்ப ஏற்பட்ட பிரிவாகும்.

4. இவர்கள் காடுகளுள் சில பாகங்களை வளம்படுத்தி விளைவுகளைச் செய்து கொள்வர். இவர்களுக்குரிய உணவுப் பொருள்கள் வரகு, சாமை, முதிரை என்பன. இவற்றை விளைத்தலும், களை எடுத்தலும், அரித்தலும், கடாவிடுதலும் இவர்கட்கு உரிய தொழில்களாம். ஆடு, மாடு, எருமை, இவற்றையும் மேய்ப்பர். இவர்கள் இசைப்பயிற்சியிலும் பின் வாங்கியவர் அல்லர். தீங்குழல் ஊதுவர். இவர்கள் தம் நிலத்திற்கெனத் தனிப்பண்ணையும் அமைத்துக் கொண்டிருக்கின்றனர். அவை முல்லைப்பண், சாதாரிப்பண் என்பன. இவர்களுடைய இசைக்கருவிகள் முல்லையாழ், பறை என்பனவாகும்.

5. இவர்கள் சிறந்த வீரப்பண்பு வாய்ந்தவர்கள். ஏறுதழுவியே திருமணத்தை முடித்துக் கொள்வர். ஏறு



தழுவுதலாவது நல்ல வன்மை மிக்க காளைகளை விரட்டி விட்டுவிட்டால், அதனை அடக்கிக் கட்டிப்பிடித்து வருவதாம். இப்படிச் செய்வது எளிதான செயல் அன்று. உயிருக்கே ஆபத்து நேரக்கூடியசெயல். என்றாலும், உயிரையும் பொருட்படுத்தாது மானமே பெரிதெனக்கருதி ஏற்றினைத் தழுவி அவ்வேற்றுக்குரிய ஆயனது மகளை மணந்து கொள்வர். இது வீரதீரச் செயல் அன்றோ? இன்ப விளையாட்டும் இவர்கள் ஆடுதல் உண்டு. அது, குரவைக்கூத்து எனப்படும். எழுவரேனும், ஒன்பதின்மரேனும் கைகோத்து சுற்றிச் சுற்றி ஆடுவதாம். புனல் விளையாட்டும் ஆடுவர். ஆதாவது கான்யாற்றில் நீராடி இன்புறுவதாகும்.

6. இவர்கட்கு நீர் வசதி செவ்வனே அமைந்திருந்தது. அவ்வசதி இயற்கையில்அமைந்தவை. குறுஞ்சுனை, கான்யாறு என்பன இவர்கட்குநீரை உதவின. இவர்கள் நகரமாக அமைத்துக்கொண்ட இடம் பாடி என வழங்கப்பெறும். இப்பொழுதுகூட இடையர்வாழும்இடத்தை நாம் ஆயர்பாடி என்றுகுறிப்பிடுகிறோம் அல்லவா? இந்நிலத்து விலங்குகளாக இவர்களுக்கு அமைந்தவை காட்டுச் சேவல், மான், முயல், மூவினவிலங்குகளும் ஆகும்.

7. இவர்கள் இத்துணை இயற்கை வளத்துடன் வாழ்ந்தாலும் கடவுளை மறந்தவர்கள் அல்லர். இவர்கள் பெரிய கடவுள் திருமால். அக்கடவுளைப் பல்லாவும் பல்லாற்பயன்தரும் பொருட்டு குரவையாடி மடைபல கொடுத்துவழிபடுவர் மாயோனே அன்றி, அவன் மகனை காமனையும் இவர்கள் தெய்வமாகக்கொண்டு வழிபட்டு வந்தனர்.

8. இவ்வாறு காடும் காட்டைச் சார்ந்த இடத்தையும் ஒரு பெருநகரமாக அமைத்துச் சிறக்கவாழ்ந்த நம்

முன்னோரான தமிழரது நாகரிகத்தை நாம் பாராட்ட வேண்டும் அல்லவா?

### அருஞ் சொற்கள் :

எழில் - அழகு, சாமை - தானியங்களில் ஒருவகை, முதிரை - துவரை, தீங்குழல் -இனிய புல்லாங்குழல், பண்- இசை, யாழ் - வீணை, கான்யாறு - காட்டாறு, இல்லுறை - வீட்டில் வாழும், மூவின விலங்குகள் - ஆடு, பசு, எருமை, பரவிய - போற்றிய, மடை - உணவு.

### கேள்விகள் :

1. தமிழர் சோம்பேறிகள் அல்லர்; சுறு சுறுப்புடையவர்கள் என்பது எப்படித் தெரிகிறது?
2. முல்லை நிலமலர்கள் எவை?
3. முல்லை நிலத்தில் வாழும், செல்வர், வறியர் எவ்வெப் பெயரால் குறிப்பிடப்படுவர்?
4. இவர்கட்குரிய உணவுப் பொருள்கள் எவை?
5. இவர்கள் இசையிலும் வல்லவர் என்பதை எப்படி அறிகிறோம்?

### பயிற்சி :

1. ஏறுதழுவல், குரவை.—இவற்றை விளக்கி எழுது.
2. 'முல்லை நிலவாழ்க்கை' என்பதைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.
3. இவர்களுக்கு நீர்வசதியுமுண்டு என்பதை உணர்த்து.

## இலக்கணம்

### குறிப்புவினை வினையும், தெரிநிலை வினையும்

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் இவற்றின் அடியாகப் பிறந்து காலத்தை உணர்த்தாமல்

வாறு வன குறிப்பு வினை முற்றுக்களாம். வேறு, இல்லை, உண்டு என்பனவும் குறிப்புவினை முற்றுக்களே.

| | | |
|---|---|---|
| அவன் | பொன்னன் | பொருளாதி ஆறனடியாக வந்த குறிப்பு வினை முற்றுக்கள். |
| இவன் | மதுரையான் | |
| அவள் | சித்திரையாள் | |
| இவன் | கண்ணன் | |
| அவன் | நல்லான் | |
| இவள் | நடையாள் | |

தெரிநிலை வினைமுற்று செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருளைக் காட்டும்.

(உ—ம்) படித்தான் இந்த வினைச்சொல்லால் படித்தவன் மாணவன் என்பதால் செய்பவனும், படிப்பதற்குக் கருவி புத்தகம் என்பதும், படிப்பதற்கு நிலம் வீடோ, பள்ளிக்கூடமோ என்பதும், படித்தற் செயலும், இறந்த காலமும், பாடத்தை என்னும் செயப்படுபொருளும் தெரிய நிற்றலைக் காண்க. இவ்வாறனுள் ஒன்று இரண்டு குறைந்தும் வரும். ஆனால், காலமட்டும் குறையாது.

பயிற்சி:

1. இப்பாடத்தில் வந்துள்ள வினைமுற்றுக்களில், ஐந்து தெரிநிலை வினைமுற்றுக்களை எடுத்து எழுதி, இது தெரிநிலை வினையே என்பதை நிறுவிக் காட்டு.
2. குறிப்பு வினைமுற்று ஒவ்வொன்றிற்கும் இவ்விரண்டு உதாரணம் கொடு.

# 4. பாரியும் பேகனும்

1. கொடைமடம் படைமடம் என்பன தமிழ் மொழியில் காணப்படும் இரு அருந்தொடர்களாகும். படைமடம் என்பது புறமுதுகுகாட்டி ஓடும் பகைவன் மீதோ, ஆயுதம் இன்றி வெறுங்கையனாய் உள்ள வீரன் மீதோ, இவ்வாறு எந்த விதமேனும் தன் தோல்வியைக் காட்டுபவன் மீதோ, அம்புசெலுத்தி அவனை வெல்ல மூந்தும் அறியாமையாகும். இவ்வாறு படைமடம் படைத்தமன்னர் எவரும் நம் தமிழ்நாட்டில் இருந்த தில்லை. ஆனால், கொடைமடம் படைத்த மன்னர்கள் பலர் இருந்தனர்.

2. கொடைமடமாவது தம் இயற்கையில் பிறவிக் குணமாக அமைந்த கொடைக்குணத்தால், தன்னை அடைந்து கேட்காதனவாகிய அஃறிணைப் பொருட் களுக்கும் இன்னது கொடுத்தல் தகும் இன்னது கொடுத் தல் கூடாதெனஉணராது, கொடுத்து மகிழும் ஈகையால் ஏற்படும் அறியாமையாகும். இவ்வாறு அறியாமை பட்டமன்னர் சிலருண்டு. அவர்களுள் தலைசிறந்து இருந் தவர் பாரியும் பேகனும் ஆவர்.

3. பாரி கடைவள்ளல்கள் எழுவருள் ஒருவன். அவன் பறம்புமலைக்குத் தலைவன். அவன் கொடையில் சிறந்து விளங்கினமையால் அவன் புகழ் எங்கும் பரவி இருந்தது. அவனுடைய பறம்புமலை இயற்கைவளம் படைத்தது. பகைவர்கள் அம்மலையைப் பலநாள் முற் றுகையிட்டு உள்ளிருப்பவர் வெளிவருவதற்கும் வெளி யில் இருப்பவர் உள்ளே செல்லுவதற்கும் இயலாது இருந்தாலும், அம்மலைக்குள் வாழும் மக்கள் உணவின்

பொருட்டு வருந்த வேண்டியிராது. அம்மலைநல்லதேன் அடைகள் நிரம்பி இருக்கும். பலாமரங்கள் நிறைந்து, பழங்கள் மத்தளம் போலக் காய்த்துக் கனிந்து கிடக்கும். வள்ளிக்கிழங்குகள் அளவற்றுப் பூமியில் காணக் கிடைக்கும். மூங்கில் அரிசியும் மிகுதியும் உண்டு. ஆகவே, இந்த நான்குவகையான உணவுப் பொருள்கள் இயற்கையில் நிறைந்த இடம் பறம்புமலை நாடு.

4. பாரி இசையால் திசைபோயவனாய் இருந்த மையினால், பொருமைகொண்ட மூவேந்தர், ஒருமுறை இவனை வெல்லக்கருதி இவன் மலையை முற்றுகை யிட்டனர். அப்பொழுது இவனுடைய உயிர்நண்பராகிய கபிலர் அம்மூவேந்தரையும் நோக்கி அவர்கள் வெட்கப் படும் முறையில், பாரியின் வீரத்தையும் ஈரத்தையும் உணர்த்துவார்,போல "முடியுடை மன்னர்களே! நீங்கள் பலநாள் எங்கள் பாரியின் பறம்புமலையை முற்றுகை யிட்டும் பயன் விளையாது. பாரிக்கு இருந்த ஊர்கள் முந்நூறு. அவற்றை இரவலர் முன்பே அவனைப்பாடிப் பரிசிலாகக் கொண்டு விட்டனர். இப்பொழுது நானும் பாரியும் தாம் உள்ளோம். பறம்பமலையுண்டு. நீங்கள் அவனை வெல்ல விரும்பினால், அவன் மலையைப்பெற எண்ணினால்,இரவலர்போலவேடம்பூண்டு,நும்மாதர்பின்னே வரப்பாடிச் சென்றால், பெறமுடியும்" என்று கூறினர். இதனால், பாரி அத்துணைக் கொடையாளி என்பது தெரிகிறதல்லவா! இவன் சிறந்த கொடையாளியாதலால், தான் இவனைக் குறித்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் "கொடுக்கிலாதனைப் பாரியே என்று கூறினும் கொடுப் பாரிலை" என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

5. இப்பாரிவள்ளல் தலைசிறந்த கொடையாளி என்பது அவன் முல்லைக்கொடிக்குத் தேர் அளித்ததனால்

தெரியவருகிறது. அதாவது ஒருமுறை பாரி தன் தேரில் ஏறிக்கொண்டு மலைவளத்தைக் கண்டுவரப் புறப்பட்டான். அப்படிப் புறப்பட்டவன் மலையின் இயற்கை நலன்களைக்கண்டு இன்புற்றுத் தன் அரண்மனையை நோக்கித்



திரும்பினான். திரும்பும் வழியில் ஒரு முல்லைக்கொடி தான் படர்தற்குரிய கொழுகொம்பு இன்றிக் காற்றால் அலைப்புண்டு இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்த நிலையைக் கண்டான். அவன் மனம் பாகாக உருகிவிட்டது. "ஐயோ! இந்தக்கொடி இப்படி எத்தனை நாளாக ஆடி அசைந்து கொண்டிருந்ததோ!" என்று எண்ணி, உடனே தன்தேரை விட்டிறங்கித் தான் ஏறி வந்த தேரையே அது படர்தற்குரிய கொழு கொம்பாக நிறுத்தி அதன்மீது கொடியை ஏற்றிவிட்டுத் தான் கால்கடுக்க நடந்து, தன் அரண்மனை புகுந்தான். இவ


றுடைய கொடைவண்மையைக் கண்டவரும் கேட்டவரும் இவனைத் தம் வாயார மனமாரப் போற்றிப் புகழ்வாராயினர்.

6. இனிப்பேகன் என்பவன் வரலாற்றையும் கவனிப்போமாக. பேகனும் கடை எழுவள்ளல்களில் ஒருவன். வேளாவிக் கோமகன் பதுமன் மகன். கொங்கு நாட்டைச் சார்ந்த வையாவிபுரிக்கு மன்னனாய் விளங்கியவன். அதனால், இவன் வையாவிக்கோப்பெரும் பேகன் என்று கூறப்பட்டான். வையாவிபுரி என்பது ஆவினன்குடி என்றும், சித்தன் வாழ்வு என்றும் கூறப்படும்.

7. இவன் கொடை, கல்வி, அறிவு, ஆண்மை ஆகியவற்றைப் படைத்தவன். இவனது கொடைத் திறத்தைக் கண்டே கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் போன்ற பெரும்புலவர்கள் எல்லாம் நெருங்கிப்பழகுவாராயினர். இவன் கண்ணகிஎன்னும் கற்பரசியை மனைவியாகக் கொண்டு வாழ்ந்தவன். கண்ணகி என்று இங்குக் கூறப்பட்டவள் கோவலன் மனைவியான கண்ணகி அல்லள். அப்பெயர் கொண்ட மற்றொருத்தியே ஆவாள்.

8. பேகன் ஒருநாள் தன் பணியாள் ஒருவனுடன் தன் நாட்டுவளம் கண்டுகளிக்க வெளியே சென்றான். ஒவ்வொரு பகுதியாகப்பார்த்துக் கொண்டே வந்தான். மலைப்பிரதேசமானதால் மேகங்கள் மலைமீது தவழும் தோற்றம், மலைகளுக்குக் கொடை பிடிப்பதுபோல் இருப்பதாக எண்ணிமகிழ்ந்தான். மற்றொருசார் வந்துற்றான். அங்கு மயில்கள் இருப்பதைக் கண்ணுற்றான். ஒருமயில் தனித்து நிற்பதை உற்றுநோக்கினான். அது மேகம் தவழ்வது கண்டு, தன்தோகையை மகிழ்வாய்

விரித்து ஆட நிற்கிறது என்பதை எண்ணுதவனும் அவன் மனத்தில் வேறு எண்ணம் கொண்டான். "ஐயோ பாவம், இந்த மஞ்ஞை குளிர்க்கு என்செய்



வோம் என்று தனித்திருந்து ஏக்கம் கொள்கிறது போலும். இது வாயற்ற பிராணி ஆதலின்சொல்லத் தெரியாமல் தனித்து நிற்கிறது" என்று எண்ணினன். அவ்வளவுதான் தான் போர்த்துக் கொண்டிருந்த விலையுயர்ந்த பட்டுப்போர்வையைக் கழற்றினன். அதன் அருகு சென்று அதன்மீது போர்த்தினன். அதைக்கண்ட பணியாளன் திடுக்கிட்டுப்போனன். "ஆ! நம்மரசருக்கு இருக்கும் இரக்கமானமனமே மனம். அந்த மயில் தன்னை அணுகித் தன்குறைஇன்னது என்று சொல்வதற்குமுன் இப்படி ஈந்துமகிழும் வள்ளலை எப்படிப் புகழ்வது" என்று எண்ணிக் ஆச்சரியம் உற்று நின்றான்.

9. பேகன் அம்மயில் போர்வையுடன் ஓடுவதைக் கண்டு, தானும் பெருமகிழ்வு கொண்டான். பின் தன் அரண்மனை அடைந்து, அன்று தான் செயற்கரிய செயலைச் செய்துவிட்டதாக எண்ணி எண்ணி இன்புற்றான். இப்படி இவ்விரு மன்னர்கள் ஈகையில் வரம்புமீறி நடந்து காட்டினதால், புலவர்கள் இவர்களை ஈகைக்கு ஒரு மேல் வரிச் சட்டமாக வைத்து,

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயும்
கரவாமல் ஈகை கடன்

என்று பாராட்டிப் பாடுவாராயினர்.

அருஞ் சொற்கள் :

தேன் அடைகள்-தேன் கூடுகள், இசை-புகழ், திசை போயவன் - திசை எங்கும் தன் புகழை நிலை நிறுத்தியவன், ஈரம் — அன்பு, இரவலர் - யாசகர், நலன்-அழகு, கொழு கொம்பு - கொடிகள்சுற்றிப் படர்தற்கு நடப்படும் கொம்பு, அலைப்புண்டு — அசைந்து கொண்டு, கடுக்க - நோவ, ஆண்மை- வீரம், பணியாள்- வேலைக்காரன், மஞ்ஞை - மயில், வரம்பு - எல்லை, கரவாமல் - ஒளிக்காமல் ஞாலம் - உலகம்.

கேள்விகள் :

1. பரம்புமலை இயற்கையிலேயே உணவு வளம் பெற்றது என்பது எவ்வாறு தெரிகிறது ?
2. பரம்புமலையை முற்றுகையிட்ட மூவேந்தர்களைப் பற்றிக் கபிலர் என்ன கூறினர் ?
3. சுந்தரர் பாரியை எங்ஙனம் பாராட்டியுள்ளார்.

4. பாரி இரக்க முள்ளவன் என்பது எவ்வாறு தெரிகிறது ?
5. பேகன் யாவன்? இவனை நட்பாகக் கொண்ட புலவர்கள் யாவர்?
6. பேகன் கொடையில் சிறந்தவன் என்பது எப்படித் தெரிகிறது ?
7. இரவாமல் ஈந்த இறைவர் யாவர்?

பயிற்சி:

1. கொடை மடம், படை மடம் - நன்கு விளக்கு.
2. ஏழு வள்ளல்கள் பெயரைக் குறிப்பிடு.
3. வையாவிபுரி - இதற்குரிய வேறு பெயர்களைக் குறிப்பிடு.
4. முல்லைக்குத் தேரு-என்னும் பாட்டின் பொருளை நன்கு விளக்கு.

## இலக்கணம்

### மரபு

முன்னோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் சொன்னார்களோ, அந்தச்சொல்லால் அப்படியே சொல்லுதல் மரபாகும். பிள்ளை என்னும் சொல் உயர்திணை மக்கட்கும், அஃறிணையில் கீரி, கிளி முதலியவற்றிற்கும் வழங்கப் படும் மரபுச் சொல்லாகும். சாத்தன் பிள்ளை, கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளை எனவரும். இவ்வாறு இன்றி, யானைப்பிள்ளை, குருவிப்பிள்ளைஎன்று கூறுதல் தவறாகும்.

பயிற்சி


கன்று, குட்டி, குலை, சுளை, ஈர்க்கு-இந்தச் சொற்களை மரபு கெடாமல் தொடராக அமைத்து எழுது.

# 5. குடிசைத் தொழில்கள்

1. நம் நாடாகிய இந்தியா தேசம் பொருளாதாரத் துறையில் பெரிதும் பிற்போக்குடையது. ஏனைய நாடுகளோ எனில், இத்துறையில் முற்போக்குடையன. இதற்குக் காரணம் பலவாக இருந்தாலும், முக்கியமாக எடுத்துக்காட்டக்கூடிய ஏது, சோம்பலுடைமையும், சுறுசுறுப்புடைமையுமேயாகும். மேனாட்டவர் சுறுசுறுப்பும், கீழ்நாட்டவராகிய நாம் சோம்பலும் உடையவர்கள் என்பதை மறுக்கமுடியாது. மேனாட்டவர் காலத்தை வீணாக்குவதில்லை. "காலமே பொன்" என்பது அவர்கள் கொள்கை. அவர்கள் நாட்டு உழவர்கள் உழவு செய்த காலம் போக, மற்றைய நேரங்களைக் குடிசைத்தொழில் பல புரிந்து ஊதியம் தேடுகின்றனர்.

2. நம் நாட்டு உழவர்கள் சிறு நிலங்களையே தமக்கு உரியனவாகக் கொண்டிருக்கின்றனர். அவற்றால் அவர்கள் பெறும் ஊதியம் தம் வாழ்க்கைக்குப் போதுமானதாகக் காணப்படவில்லை. குடும்ப பாரம் அவர்களால் சுமக்க இயலாமல் போகிறது. போதாக் குறைக்காகக் கடன் வாங்கிக் கஷ்டநிலைக்கு வந்துவிடுகின்றனர். அந்தோ! நம் ஏழைக் குடியானவர்கள் ஏன் இப்படி அல்லலுற்று அழுங்கவேண்டும்? உழவுத் தொழில் செய்த நேரம்போக, மிகுந்த நேரத்தை வேறு தொழிலை ஏன் செய்யக் கூடாது? உழவுத் தொழில், ஆண்டு முழுவதும் நடக்கக்கூடிய தொழில் அல்லவே. ஆண்டில் சில மாதங்களே இத்தொழிலை மேற்கொண்டு நடத்த வேண்டி இருக்கும். நல்ல மழை பெய்தால்தான் சாகுபடி செய்ய இயலும். அப்படி மாரி பொழிந்து வந்தா

லும், சில நாட்களுக்கே வேலையுண்டு. பல நாட்கள் வாளா இருக்கவேண்டியதே யாகும். இந்த நாட்களை



வீணாக்காமல் குடிசைத் தொழிலை மேற்கொள்வது எல்லாப்படியாலும் நலமன்றோ?

3. "குடிசைத் தொழில், குடிசைத் தொழில், என்பது எது" என்பதை முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். இத்தொழிலை எளிதில் கற்றுக் கொள்ளக்கூடியதாய், பெருவாரியான முதற்பணம் தேவையில்லாததாய், எப்பொழுது வேண்டுமானாலும் நிறுத்திவிடக்கூடியதாய் இருக்கவேண்டும். இவற்றுடன் இத்தொழில் மூலம் செய்யப்படும் பொருள்கள், மக்கட்குப் பயன்படக்கூடியனவாய் எவரும் வாங்கக்கூடியனவாய் இருக்கவேண்டும். இவ்வாறு செய்யக்கூடிய குடிசைத் தொழில்கள் பலவாக இருப்பினும், கோழிவளர்த்தல்,

தேனீ வளர்த்தல், நூல் நூற்றல், கயிறு திரித்தல், கூடை முடைதல், பாய்பின்னுதல் முதலியவற்றைக் குறிப்பிடலாம். ஆகவே, இங்குக்கோழி வளர்த்தல், காய்கறிகளைப் பயிரிடல், நூல்நூற்றல், கயிறுதிரித்தல், முதலான தொழில்களைப்பற்றிச் சிறிது கவனிப்போமாக. கோழிகளை வளர்த்தற்குத் தனித்தனிப் பண்ணைகள் இருக்க வேண்டும் நல்ல இனத்தைச் சேர்ந்த கோழிகளை வாங்கி வளர்க்க வேண்டும். அக்கோழிகளைத் தம் போக்கில் இரைவுதேட விடாமல், நாமாகக் கோழிக்குரிய தானியங்களைப்போட்டு வளர்க்க வேண்டும். இப்படி வளர்க்கப்படும் கோழிகள் நன்கு உடற்பருத்து வளர்ந்ததும் பெரிய பெரிய முட்டைகளையிடும். நல்ல வளமான கோழியாக இருந்தால், ஒரு கோழியே பல முட்டைகளையிடவல்லது. அக்கோழிமுட்டைகள் அத்துணையும் நல்ல பணமாகும். வெளி ஊர்களுக்கு அவற்றை அனுப்பிப் பெரும் பணம் பெறலாம். மருத்துவச் சாலைகளுக்கு இவை பெரிதும் வேண்டற்பாலன அல்லவா? அங்கும் விற்பனை பண்ணலாம்.

4. கோழி வளர்த்தல்தானே என்று சில கோழிகளை வாங்கி வைத்துக்கொண்டு, அவற்றைக் கண்ட இடங்களில் திரிய விட்டுவிடக்கூடாது. அப்படி விடுவதால் அவை கண்டகண்ட பொருள்களையெல்லாம் தின்று, உடல் மெலிந்து, சிறிய முட்டைகளையிட்டு, நல்ல பலனைத் தராமல் போகின்றன. இவ்வாறேயன்றி மற்றொரு வகையிலும் நஷ்டம் ஏற்படுகிறது. அடுத்த வீட்டார் அதனைத் திருடிக்கொள்ளநேரிடும். "கோழி, நம்மை வளர்க்கும்எஜமானர்வீட்டில்தான் முட்டையிடவேண்டுமென்று எண்ணி முட்டையிடும் நேரம் வந்ததும் வீட்டிற்குள் ஓடிவந்து முட்டையிட்டுச் செல்லாது. கண்ட

கண்ட இடங்களில் இட்டுவிடுவதால், அம்முட்டை எவர் கண்ணுக்குக் காணப்படுகிறதோ, அவர்கட்கு அஃது



உரியதாகிவிடும். இது பெருநஷ்டம் அல்லவா? ஆகவே, கோழிப்பண்ணையென ஒன்றை அமைத்து அவ்விடத்தில் கோழிகளை வைத்து வளர்த்துவருதல் நல்லதாகும்.

5. விவசாயிகள் பெரும்பாலோர் கிராமங்களில் வாழ்பவர்கள் ஆதலின், அவர்கள் இல்லங்கட்கு முன்னும் பின்னும் காலி இடங்கள் உண்டு. அக்காலியிடங்களைச் சும்மா விட்டுவிடாமல், காய்கறி வகைகளைப் பயிரிடுவதற்குப் பயன்படுத்த வேண்டும். வாழை மரங்களை வைத்துப் பயிரிடலாம். கத்திரிச்செடி, மிளகாய்ச்செடி, வெண்டைச் செடிகளைப் பயிரிடலாம். கீரைப் பாத்திகளை அமைத்துக் கீரைகளைப் பயிரிடலாம். இக் காய்கறிப் பயிர்களைச் செய்துவந்தால், உடற்பயிற்சி செய்தது போலவும் ஆகும். இதனைச் செய்வதற்கு ஏர் வேண்டுவதில்லை, கலப்பையும் வேண்டுவதில்லை, காளைகளும் வேண்டுவதில்லை. மண்வெட்டி இருந்தாலே போதும்

மானதல்லவா ? கிணற்று நீரைமட்டும் பாய்ச்சிவர வேண்டும். இக் காய்கறி பயிர், நமக்கும் பயன்தந்து பிறர்க்கும் பயன்தரக்கூடிய தல்லவா? இந்த முறையை எல்லோர் உழவரும் செய்துவரின், உணவுப் பஞ்சம் தலை காட்டுமா? இது எவ்வளவு நன்மையாக இருக்கும்! தேவைக்குமேல் மிகுதியாக இருப்பவற்றைக் கடைத் தெருவில் கொண்டுசென்றால், அவை அப்பொழுதே பலன் அளித்துப் பணத்தைக் கொடுக்கக்கூடியவையல்லவா? மேலும் மிகுதியாகப் பயிரிடப்பட்டால், பெரிய பெரிய சந்தைகள் நடக்கும் ஊர்களுக்கு அனுப்பி, நல்ல ஊதியத்தைப் பெறலாம் அன்றோ ?

6. நூல் நூற்றலும், ஓய்ந்த நேரங்களில் செய்யக் கூடிய வேலையாகும். இது மகளிர்க்கு ஏற்ற வேலை என்றுகூடக் கூறலாம். இது வீட்டில் இருந்துகொண்டே செய்யப்படுதலின், இதனைக் காருகவினை என்றே நம் முன்னோர் சுட்டிவந்தனர். இதற்குரிய மூலப்பொருள் பருத்தி. இப்பருத்தி கிராமங்களில் கிடைக்கக்கூடியதே. இப்பருத்தியைப் பஞ்சாக்கித் தக்களிகொண்டும் சர்க்காவைக்கொண்டும் நூல் நூற்கலாம். இத்தொழிலைக் கற்பதும் கடினம் அன்று. காந்திப் பெரியார் மிகுதியும் தம் கருத்தைச் செலுத்தியது இத்தொழிலில் அன்றோ! அவரும் தாமே நூற்று வழிகாட்டி இருக்கின்றனர் அல்லவா? கையினால் நூற்கப்படும் நூல், நல்ல உறுதியுடையதாய் இருப்பதனால், அதனால் நெய்யப்படும் ஆடையும் உறுதியுடையதாய், நீண்டநாள் உழைக்கக்கூடியதாய் இருக்கும். இதனால், சிக்கனவாழ்வும் சிறக்க ஏற்படும் "செய்யும் தொழிலனைத்தும் சீர்தூக்கி நோக்குங்கால் நெய்யும் தொழிற்கு நிகரில்லை" என்னும் பாடலையும் நம்

கருத்துக்குக் கொண்டுவந்தால், நூல்நூற்று ஆடை செய்யும் சிறப்பு நன்கு நம்மனத்தில் பதியும்.

7. கயிறு திரித்தலும் ஒரு நல்ல கைத்தொழிலாகும். கயிறுதிரித்தற்குரிய மூலப்பொருள் தேங்காய் நார். இந்நார் நம் நாட்டில் ஏராளமாக உண்டு. தென்னை மரங்களைக்காணாத ஊரோ, கிராமமோ உண்டா? சோழ நாட்டில் காலை வைத்ததும் சாலை ஓரங்களிலும் சோலை இடங்களிலும் காட்சி அளிப்பது இத்தென்னைமர



மன்றோ? இத்தென்னைமரம் நமக்கு எல்லாப்படியாலும், பயன்தரும் மரங்களில், சாலச் சிறந்தது. உண்மையில் இதன் மட்டைகளிலிருந்து கிடைக்கக் கூடிய நாரினைப் பற்றிப் பலர் கவலைப்படுவதில்லை. அதனை அடுப்பெரிக்க மட்டும் கற்றுக்கொண்டனர். மலையாள தேசத்தில் பல ஏழைகள் பிழைப்பது இந்தத் தேங்காய் நாரினாலேயாகும். இந்நாரினால்தான் அறைகளுக்கு முன் இடப்

படும் வழியாய் செய்யப்படுகிறது. கயிறுகள் திரிக்கப் படுகின்றன. இத்தொழிலை ஏன் கிராமவாசிகள் ஓய்ந்த நேரங்களில் செய்யக்கூடாது? இதனைக் கூட்டுறவு முறையில் நடத்தினால் நல்ல ஊதியம் கிடைக்கும் அல்லவா? தேங்காய் நார்தான் கயிறுபின்ன பயன்படக் கூடியதென்று எண்ணிவிடாதீர்கள். கற்றாழைகளிலிருந்து நார் எடுத்தும் கயிறு திரிக்கலாம். கற்றாழை கிராமத்தில் இருக்கக் கூடிய மூலப்பொருள் அல்லவா?

8. ஆகவே, பொருளாதார நிலையைப் பெருக்கி நாமும் வாழ்ந்து நம்மைச் சார்ந்த பொதுமக்களும் நல் வாழ்வை நடத்த வேண்டுமானால், குடிசைத் தொழிலை மேற்கொள்ள வேண்டுவது மிகமிக இன்றியமையாத தாகும்.

அருஞ் சொற்கள் :

ஏது - காரணம், ஊதியம் - வருவாய், அல்லல் - துன்பம், அழுங்க - வருந்த, மாரி - மழை, வாளா - சும்மா, இல்லம் - வீடு, காலை - மாடு, காருகவினை - வீட்டுவேலை, சால - மிகவும்.

1. நம் நாட்டுப் பொருளாதார நிலை உயர்வடையாமைக்குரிய காரணங்கள் யாவை?
2. உழவர்கள் எவ்வெக்காரணங்களால் குடிசைத் தொழிலினை மேற்கொள்ள வேண்டும்?
3. கோழிகளை வளர்த்து ஊதியம் தேடும் முறை யாது?
4. தோட்டப் பயிர்களால் எப்படிப் பயனடைய முடியும்?
5. நெய்தல் தொழிலை எப்படி நடத்தலாம்?
6. தேங்காய் நார் எப்படிப் பயன்படுகிறது?

பயிற்சி :

1. பால்பண்ணை, தேனீவளர்த்தல், கூடைமுடைதல், பாய்பின்னுதல் முதலிய குடிசைத்தொழில் களைப் பற்றிச் சிறு குறிப்பு எழுது.

இலக்கணம் :

### வழுவமைதிகள்

தமிழ் மொழியில், சிற் சில, காரணங்கொண்டு இலக்கண வழுக்களும் காணப்படுகின்றன. அவை வழக்கு முறையில் அமைந்துவிட்டமையால் அவற்றை இலக்கணத்தில் வழுவமைதி என்பர். உதாரணமாகப் பசுவைப்பார்த்து அன்பினால் "என் அம்மை வருகின்றாள்" என்று கூறினால், இஃது அன்பினால் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்ட திணை வழுவமைதி எனப்படும்; ஏழை ஒருபணக்காரனைப் பார்த்து, "ஐயா நீங்கள் தாம் என் தாய்" என்று கூறினால், இது தன் வறுமை காரணமாக ஆண்பால், பெண்பாலாக வந்த பால் வழுவமைதியல்லவா? இப்படிச் சில வழுவமைதிகள் உண்டு.

பயிற்சி :

திணை வழுவமைதிக்கும், பால் வழுவமைதிக்கும் தனித்தனி மும் மூன்று உதாரணம் கொடு.

## 6. தெய்வத் திருவருள்

1. சுகலன் என்பவன் ஒரு வேளாளன். அவன் மனைவி சுகலை என்பவள். சுகலன் நிலபுலம் உடையவன். இதனால், அவனுக்குச் செல்வத்திற்குக் குறைவில்லை. குபேர சம்பத்தாய் வாழ்ந்தான். இவ்விரு தம்பதிகட்கும் பன்னிரு புதல்வர்கள் பிறந்தனர். இவர்களைச் சுகலனும்,

களையும் மிகவும் அன்பாய் இன்பாய் வளர்த்துவந்தனர். இவர்கள் செல்வக்குடியில் பிறந்த காரணத்தால், தருக்கிச் செருக்கி வாழலானார்கள். இப்படி இவர்கள் கர்வத்தோடு இருக்கிறார்களே, இவர்களை அடக்கி ஒடுக்கி நல்வழிப் படுத்துவோம் என்னும் எண்ணம் பெற்றோர் களுக்கு உண்டாகவில்லை. இதற்குக் காரணம் செல்வச் செருக்கேயாகும். சிறியர் மதிக்கும் செல்வம் வந்தால், சிறிய புன்செருக்கு வந்து மூள்வது இயற்கைதானே! நன்றாகப் பேசிக்கொண்டிருப்பவர்களும் ஊமைபோல் அல்லவா நடிப்பர்? காதுள்ளவர்களும் செவிடராக அல்லவோ போவர்? கண்பெற்றவரும் குருடராய் அல்லவா திகழ்வர்? இஃது உலக இயற்கை. ஆதலால், அவர்களைப்பழிப்பதில் தவறில்லை. இந்தத்தருக்குத்தலைக்கு மேல் போய்விட்டது; இப்பிள்ளைகள் குலத்தொழிலையும் மறந்தனர். தீய குணத்தையும் மேற்கொண்டனர். இந்நிலையில் பெற்றோர்களும் இறந்தனர்.

2. ஒருநாள் மைந்தர்கள் வேடரோடு கூடிக்கொண்டு காட்டிற்குள் வேட்டையாடச் சென்றனர். அந்தோ! இதுவும் இவர்கட்குத் தலைவிதி போலும். நிலத்தை உழுது நீர்பாய்ச்சி விதைவிதைத்து அறுவடைசெய்து பெற்ற பயனைத் தாமும் உண்டு, பிறர்க்கும் ஈந்துவாழும் பெருவாழ்வு வாழாது, வேட்டைமேல் நாட்டம் வைத்தனர். விதி யாரை விட்டது? வேடர்களும் இவர்களும் வேட்டையாடினர். வேட்டையாடிக் களைத்ததனால், ஒரு மரநிழலில் வெயிலுக்கு ஒதுங்கினர்.

3. அம் மரத்தின்பக்கத்தே ஒரு புதர் இருந்தது. அப் புதரில் ஒரு பெரியார் தவம் செய்து கொண்டிருந்தனர். அத் தவசியை இப்பன்னிரண்டு மக்களும் பார்த்தனர்.

தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் அல்லவா? இளமை யில் நல்லமுறையில் வளர்க்கப்படாத காரணத்தால் இப் பெரியவரைக் கண்டதும், "கொல்" எனச் சிரித்துக் கல்லை எடுத்து அவர்மீது போட்டு, அவர் தவத்தைக் கலைத் தனர். தூங்கும் புலியைக் குருடும் நொண்டியுமாய் இருப்பவன் ஒருவன் எழுப்பிவிட்டால், அவன் அப்புலி யின் கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியுமா? அதுபோலத் தவசியின் கோபத்திற்கு இப்பிள்ளைகள் ஆளாகாமல் இருக்க முடியுமா? உடனே முனிவர் இப் பிள்ளைகளைப் பார்த்து, "நீங்கள் உம் குலத்தொழிலான உழவுத் தொழிலை மறந்தீர். வேடர் தொழிலான வேட் டையை மேற்கொண்டீர். அத்துடன் நில்லாமல் ஒரு தீங்கும் உமக்குச் செய்யாது தனியே தவம் செய்து கொண்டிருந்த என்மீது கல்லை வீசி எறிந்து என் தவத் தையும் கலைத்தீர். ஆகவே, நீங்கள் பன்றிகளாகப் பிறந்து, உம் பெற்றோர்களைப் பிரிந்து திரிவீர்களாக" என்று சாபம் இட்டனர்.

4. பன்னிரு மைந்தர்களும், மிகவும் வருந்தித் "தாம் செய்தகுற்றத்திற்கு இது ஏற்ற தண்டனைதான்" என்று உணர்ந்து அம் முனிவர் பாதத்தில் விழுந்து "நாங்கள் அறியாது செய்த குற்றத்திற்காகப் பெருஞ்சாபம் போட்டுவிட்டீர். இதில் இருந்து நாங்கள் மீளமுடியாது. 'முடியிட்டவன்தான் அவிழ்க்கவும்வேண்டும்' என்பர். அதுபோல நீரே இந்தச் சாபத்திலிருந்து மீள வழிகாட்ட வேண்டும்" என்று வேண்டி நின்றனர். முனிவர் சினம் நீர்பூழிய எய்த வடுபோல, உடனே மாறியது. அவர் கள்மீது இரக்கமும் தோன்றியது. அவர்களைப்பார்த்து "ஆலவாய் அண்ணலே" உங்கட்குத் தாயாக வந்து ஆதி

ரித்து அருள் செய்வான். அஞ்சாதீர்" என்று கூறி மூன்
போலத் தவத்தை மேற்கொண்டார்.

5. பன்னிருவைந்தரும் அடுத்தாற்போன்றிருந்த
ருருவிருந்த துறையில் ஒருகாட்டில் வாழ்ந்துவந்த கேழல்
மட்டு மன்னனுன ஒரு பன்றியின் வயிற்றில் குட்டிகளாக
உதித்தனர்; உதித்து அக்காட்டில் உழல்வாரானுர்.

6. அரசன் தன்குடிகளைக் கள்வராலும், பகைவ
ராலும், விலங்குகளாலும், தன்னுலும், தன் பரிசனங்
களாலும், தீங்குவராமல் காக்கவேண்டியது கடமை.
அந்த முறைக்கு இணங்கத் தன் குடிமக்களுக்கு மிருகங்
களால் தீங்கு ஏற்பட்டுப் பயிர்கள் எல்லாம் அழிவதைக்
கண்ட பாண்டிமன்னன்,வேட்டையாடப்புறப்பட்டான்.
வலைவீசி, பறைகள் கொட்டி மிருகங்களைத் தம்தம்இருப்
பிடங்களில் இருந்து வெளிவரச் செய்து வேட்டை
யாடிப் பலவற்றைக் கொன்ருன்.

7. பாண்டிய மன்னன் பல மிருகங்களைக் கொன்று
காட்டைப் பாழ் செய்வதை யறிந்த ஒரு பன்றி, இச்
செய்தியைத் தன் வேந்தனுன ஏனத்தினிடம் சென்று
இயம்பியது. பன்றிராஜனுக்குக் கோபம் பொங்கியது.
"நம் இனத்தவர்களான மிருகங்கள் மாய்ந்துபோக நான்
மட்டும் உயிரோடு இருப்பதா? நானும் போருக்குச் செல்
வேன். பாண்டியனை வென்ருல் வெற்றிகொண்டாடு
வேன். அவனை எதிர்த்துப் போரில் மாண்டால், வீர
சுவர்கம் புகுவேன்'' என்று தீர்மானித்துத் தன் மனை
வியை நோக்கி, "கண்ணே நான் போருக்குப்போகிறேன்.
வெற்றி பெற்ருல் விருதுகளுடன் வீடு திரும்புகிறேன்.
அதற்காக வருந்தாதே. நம்மக்களைக் காப்பாற்றிக்
கொண்டு சுகமாக இரு'' என்றது. பெண்பன்றி, தன் கண

வனான ஆண்பன்றியைப்பார்த்து "அன்பே! உயிர் அங்குப் போக உடல் இங்கு இருக்குமோ? பிள்ளை பெறுவதும் காப்பதும்? நாம்மால் ஆவதா? மரம் வைத்தவன், தண்ணீரை ஊற்றாமல் இருப்பானோ? நம்பிள்ளைகளை நாமா காப்பவர்? கடவுள் காப்பான். நானும் உன்னுடன் வருவேன். நீ செய்யும்போரைக் காண்பேன். வென்றால், உன்னுடன் திரும்பி வீடு வருவேன். அவ்வாறு இல்லாமல் நீஇறந்தால், நானும் உன்னுடன் அங்கேயே இறப்பேன்" என்றது. ஆண்பன்றி தன் மனைவியின் உறுதியையும், பதிபக்தியையும், கண்டு மெச்சி "சரி அப்படியானால் புறப்படு" என்று கூற இரண்டும் புறப்பட்டன.

8. இப்பன்றிகளைச் சூழ்ந்து ஏனையபன்றிகளும் படைபடையாகத் திரண்டன. பன்றிச் சேனை வருதலைக்கண்ட பாண்டிமன்னர்வீரர், அம்புமாரி பொழிந்தனர். அம்புபட்டதும் பன்றிவீரர் பலர் இரத்தம் சிந்தக் குடல்கள் சரிய மூளை சிதற இறந்தனர். ஆனால், சில பன்றி வீரர், பாண்டிமன்னன் வீரரைச் சும்மா விடவில்லை. அவர்களுள் சிலரைச் சிதைத்தன. சிலரை உதைத்து அவர்கள் வாயில் இரத்தம் கக்கச்செய்தன; சிலர் மார்பில் தம் கொம்பைக் குத்தித் துளைசெய்தன; சிலரைத் தம் கொம்பால் குத்திப்பிளந்தன; இப்படி இருதிறச் சேனைகளும் போரிட்ட காரணத்தால் கால் ஒடிந்தவர் சிலரும், தலையற்றவர் சிலரும், தோள் இழந்தவர் சிலரும், தொடை வெட்டுண்டவர் சிலரும், ஆகப்போர்க்களத்தில் பலர் வெட்டுண்டு கிடந்தனர்.

9. இப்படிப்பலர் அழிவதைக்கண்ட பெண்ணேனம் தன் ஆண் ஏனத்தைப் பார்த்து, "எல்லோரும் வீணே மாய்வதில் என்னபலன்? நாம் இனித்திரும்பி உயிர்தப்

யப் போவது தான் தக்கது" என்றது. இதைக்கேட்ட ஆண்பன்றி கோபம் மிகவும் கொண்டு, "சீ! நீ பெண் என்பதை உன்பேச்சால் நன்கு வெளிப்படுத்தி விட்டாய். 'நுண்ணறிவு எவ்வளவு உடையராயினும் பெண் அறிவு பெரும் பேதைமை உடையது' என்பதை நீ பொய்யாக் காது மெய்யாக்கிவிட்டாய். நான் வீரக்குடியில் பிறந்தவன். நம் இனமான பன்றி இனம், சிங்கம்வாழும் ஆற் றோரத்தில் சென்று நீரைப்பருகும் நெஞ்சுரம் பெற்றது. ஆனால், நாம் வாழும் துறையின் அருகே சிங்கம் நீர் அருந்த அஞ்சும் என்பது உனக்குத் தெரியாதோ? அப்படிப்பட்ட குலத்தில் வந்த நான், செழியனைப் புறமுதுகு காட்டி ஓடச்செய்வேன். இல்லையானால், அவனோடு போரிட்டு இறந்து இன்புகழை நிலைநாட்டுவேன்" என்றது.

10. இந்தவாறு சொல்லிப்பாண்டியனையும் வீரரை யும் அரசப்பன்றி எதிர்த்தது. பன்றியின் வீராவேசத் தைக்கண்ட பாண்டியன் வெகுண்டு, தன் வீரரால் இதை அடக்க இயலாது என்பதைஉணர்ந்து தானே போருக்கு எழுந்து அதனை எதிர்த்து நின்றான். பன்றி தன் இரு மருப்புக்களால் பாண்டியன் குதிரையைக் குத்திச் செந் நீரை உண்டாக்கவே, பாண்டியன் கீழே இறங்கித் தன் இரும்புக்கழியால் ஓரே அடி பன்றியின் தலையில் அடித் தான். பன்றி இறந்தது.

11. ஆண்பன்றி இறக்கக்கண்ட பெண்பன்றி, தான் உடனே உடன்கட்டைஏற விரும்பாமல் தன் கணவனைக் கொன்ற பாண்டியனைத் தானும் எதிர்த்துப் போராடத் தொடங்கியது. ஒரு பெண்பன்றி தன்னை எதிர்ப்பது கண்ட பாண்டியன், அதனோடு போர் செய்ய விரும்பாமல், தன் வீரர்களில் ஒருவனான சருச்சரன் என்பவனைப்

போரிட விடுத்தான். அவன் பாண்டியன் அடித்த இரும்புத் தண்டால் பெண்பன்றியின் தலையில் ஓங்கி யடிக்க அப்பெண்பன்றியும் இறந்தது.

12. தம் பெற்றோர்கள் இறந்ததை உணர்ந்த குட்டிகள்பட்ட துயரைச் சொல்லிமுடியாது. இங்கும் அங்கும் ஓடின. தாய்ப்பால் பருக விரும்பி வாடின. வெயில் வருத்தியதால் மெலிந்தன. இவற்றின் நிலைகண்ட ஆலவாய் அண்ணல், மிகவும் இரக்கம்கொண்டு, அவற்றிற்கு அருள்செய்யத் தாமே தாய்ப்பன்றியாக அவற்றின் அருகே வந்தார். தாய்ப்பன்றியைக்கண்ட பன்றிக்குட்டிகள் ஆனந்த முற்றுக் கிட்டிமுட்டின; சுற்றிலும் மொய்த்துக்கொண்டன; முதுகில் பாய்ந்து ஏறிக்கொண்டன; குதித்தன. இங்கும் அங்கும் ஓடின. இறைவன் இவற்றிற்கு மேலும் கருணை செய்ய அப்பன்றிகளை மானிட உருவமாக மாற்றினான். ஆனால், அவற்றின்முகம் மட்டும் பன்றியின் முகமாக இருந்தது. அவை மானிட உடல் பெற்றதற்கு ஏற்ப ஒழுங்கும் கல்வியும் பெற்றுச் சிறந்த அறிவுடையனவாய்த் திகழ்ந்தனர். எல்லார்க்கும் முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளும் உண்டோ!

13. மானிட உருவினைப்பெற்ற இப்பன்றிகள் பன்னிரு ஆதித்தர்போலப் பேர்அழகுடன் பல்கலையுணர்ந்த செல்வராய மலையில், வாசம் செய்து வந்தனர். இப்படிப் பரமன்செய்த அருள் திருவிளையாட்டைக்கண்ட மீனாட்சியம்மையார் "ஐயா! நீர்மலத்தையுண்டு மலத்தில் புரண்டு சேற்றில் கிடக்கும் பன்றிகட்கு நீரே, தாய்ப்பன்றியாகி அருள் சுரந்ததோடு நில்லாமல், அவற்றை மானிடராகவும்செய்துவிட்டீரே. இதற்குக் காரணம்என்ன?" என்று வினவினள். அதற்கு விடையாகஇறைவன் "பெண்ணே

எமக்கு இது விருப்புடையது. இது விருப்பற்றது என்ப தில்லை. யாம் எவ்வுயிரையும் ஒரே நிலையில் இருந்து காப்பாற்றுவோம். இதனால்தான், வேதம் நம்மைச் சகலஜீவ தயாபரன் என்று சொல்லுகிறது. இத்துடன் இப்பன்றிகளை விட்டுவிட்டதாக எண்ணாதே. இவற்றைப் பாண்டியனுக்கு அமைச்சர்களாகவும் அமைக்கப் போகின்றோம்" என்று கூறினார்.

14. பின்பு அங்கயற் கண்ணிமணாளர் பாண்டியன் கனவில் தோன்றி, "மலையில் பன்னிரு பன்றி உருவான மானிடர் வாழ்கின்றனர்; அவர்கள் கல்வி கேள்விகளில் தலைசிறந்தவர்கள்; மந்திரத்தொழிலுக்கு ஏற்றமாணறிவு படைத்தவர்கள்; மதிநுட்பம் நூலொடு உடையவர்கள். சொல்சோர்வு இல்லாதவர்கள். "அரசரால் நன்கு மதிக்கப்பட்டோம்' என்னும் செருக்கு அமையப் பெறாதவர் கள்; அரசர் விரும்புவனவற்றை வேட்பெனக் கருதி, அவற்றை விரும்பாதவர்கள். அழல்போல் அரசனை அணு கியும் அகன்றும் இராதவர்கள். நிழல்போல உடன் இருப்பவர்கள். இன்னோரன்ன குணங்களை எல்லாம் ஒருங்கேபடைத்தவர்கள். அவர்களை நீ அமைச்சர்களாக அமர்த்தல் நலமாகும்" என்றுகூறப் பாண்டியன் உடனே இறைவன் அருளை வியந்து, தன் ஆட்களை விடுத்து, அப்பன்றி உருவமைந்த மானிடரை அழைத்து வரச் செய்து அவர்களை ஆண்டவன் ஆணைப்படி அமைச் சர்களாக்கி மகிழ்ந்தான். அவர்களும் தம் மந்திரித் தொழிலை நன்முறையில் நடத்தி,மன்னனுக்குச் செல்வத் தைப் பெருக்கிச் சிறக்க வாழ்ந்தனர்.

அருஞ் சொற்கள் :

வறிய - வீணான, புன்செருக்கு - தாழ்வுடைய கர்வம், சினம் - கோபம். ஆலவாய் அண்ணல் - சிவபெரு

மான், ஏனம், கேழல் - பன்றி, விருது - வெற்றிக்கு அறிகுறியான அரச அடையாளச் சின்னங்கள், பதி - கணவன், செழியன் - பாண்டியன், மருப்பு - தந்தம், செந்நீர் - இரத்தம், ஆதித்தர் - சூரியர். அங்கயற் கண்ணி - மீனாட்சி.

## கேள்விகள் :

1. வேளாளன் மக்கள் ஏன் பன்றியுருவடைந்தனர்?
2. சிவபெருமான் ஏன் பன்றியாக வடிவு கொண்டனர்?
3. சிவபெருமான் பன்றிகட்கு எவ்வெவம் முறையில் அருள் சுரந்தார்?
4. மந்திரிகட்கு அமையவேண்டிய குணங்கள் எவை?
5. சிவபெருமான் மீனாட்சியம்மையாருக்குக் கூறிய மொழிகள் யாவை?

## பயிற்சி :

1. வீரசுவர்க்கம், சகலஜீவதயாபரன், இவற்றை விளக்கு.
2. அரசன் படைகளும், பன்றிப் படைகளும் போரிட்ட முறையைச் சுருக்கி எழுது.
3. நாட்டுக்கு நேரக்கூடிய ஐவகைப் பயங்களைக் குறிப்பிடு.

# 7. ஒட்டக்கூத்தரும் புகழேந்தியாரும்

(நாடகம்)

முதற்களம்

**இடம் :** பாண்டியன்.

**காலம் :** முற்பகல்.

**நடிகர் :** பாண்டிமன்னர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார், அமைச்சர் முதலியோர்.


[ஒட்டக் கூத்தர் தம் மன்னராகிய சோழ வரசருக்குப் பெண் பேசப் பாண்டியனைக் கண்டனர். புகழேந்தியார் பாண்டியன் அவைக் களப் புலவராதலின், "எங்கள் பாண்டியன் திரு மகளை மணத்தற்குரிய அத்துணைச் சிறப்புச் சோழராஜனிடம் என்ன இருக்கிறது?" என்று கேட்டனர். அப்போது.]

**ஒட்டக்கூத்தர் :—**

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே !
கூறுவதும் காவிரிக்கு வைகையோ ? அம்மானே !
ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ ? அம்மானே !
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ ? அம்மானே !
வீரர்க்குள் வீரன்ஒரு மீனவனோ ? அம்மானே !
வெற்றிப் புலிக்கொடிக்கு மீனமோ ? அம்மானே !
ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ? அம்மானே !
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநாடு? அம்மானே!

**புகழேந்தியார் :—**

ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்தது? அம்மானே!
ஒப்பரிய திருவிளையாடல் உறந்தையிலோ ? அம்மானே !



திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ? அம்மானே!
சிவன் முடியில் ஏறுவதும் செங்கதிரோ? அம்மானே!
கரைபொருதிரல் காவிரியோ? வையையோ? அம்மானே!
கடிப்பகைக்குத் தாதகியும் கண்ணியோ? அம்மானே!
பாவைபணிந்ததுஞ் சோழன்பதந்தனையோ? அம்மானே!
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதோ? அம்மானே!

[இப்படி இரு பெரும் புலவர்கள் கைச்சண்டையின்றி, வாய்ச்சண்டை இடுவதைக் கவனித்துக்கொண்டிருந்த வழுதி, தம்மவைப் புலவரைக் கையமர்த்தி, வாணிதாதரிடம் தம் பெண்ணைச் சோழவரசனுக்கு மணம் முடித்து வைப்பதாக அறிவிக்க, அவ்வாறே திருமணமும் நிகழ்ந்தது. புகழேந்தியாரும் வழுதியின் பெண்ணுக்குத் துணையாக அனுப்பப்பட்டார். புகழேந்தியார் சோழர்களை இகழ்ந்து பேசியதாகச் சோழராஜனுடன் ஒட்டக்கூத்தர் சொல்ல, அந்தப் பேச்சைக்கேட்ட சோழ மன்னன் புகழேந்தியாரைச் சிறையில் அடைத்தான்.]

## இரண்டாம் களம்

**இடம்:** சிறைக்கூடம்.

**காலம்:** மாலை.

**நடிகர்கள்:** புகழேந்தியார், ஒட்டக்கூத்தர், சோழராஜன், சிறைக்காவலர்.

[சோழராஜன் தன் அவைப்புலவர் ஒட்டக்கூத்தருடன் வெளியே உலாவப் புறப்பட்டவன், நேரே சிறைக்கூடத்தின் அருகு வந்தனன். அப்போது அரசன் கூத்தரை நோக்கி.]

**சோழமகாராஜன் :—**

ஒட்டக்கூத்தரே இதோ! சிறையில் அடைப்பட்டிருக்கும் இவர் ஒரு சிறந்த கல்விக்கடல் அல்லரோ?

**ஒட்டக்கூத்தர்:—**

மான்நிற்கு மோஅந்த வாள்அரி வேங்கைமுன்? வற்றிச் [செத்த
கான்நிற்கு மோஅவ் எரியும் தழல்முன் கனைகடலின்
மீன்நிற்கு மோஅந்த வெங்கண் சுறவமுன் வீசுபனி
தான்நிற்கு மோஅக்கதிரோன்உதயத்தில்தார்மன்னனே!

**புகழேந்தியார் :—**மன்னரே! இதனை ஒட்டிப் பாடவோ? அன்றி, வெட்டிப் பாடவோ?

**சோழராஜன் :—**ஒட்டியே பாடும்.

**புகழேந்தியார் :—**

மான்அவன்; நான்அந்த வாள்அரி; வற்றிச் செத்த
கான்அவன்; நான்அவ் எரியும் தழலும்; கனைகடலின்
மீன்அவன்: நான்அந்த வெங்கண் சுறவமும்; வீசுபனி
தான்அவன்; நான்அக் கதிரோன் உதயமும் தார் மன்னனே!

[புகழேந்தியார் இவ்வாறு பாடவே, ஒட்டக்கூத்தர் தலைகுனிந்து போயினர். அரசனும் புலவரை விடுதலை செய்யாமல் அரண்மனைக்குச் சென்றான். புகழேந்தியார் சிறையில் இருந்த காலங்களில், அங்கு அடைப்பட்டிருந்தகுயவன், நாவிதன், கொல்லன், வேளாளன் ஆகிய இவர்கட்கு, நல்ல தமிழ் அறிவை ஊட்டிச் சுயமாகக் கவிபாடும் வன்மையையும் கற்றுக் கொடுத்

## மூன்றும் களம்

இடம் : சோழராஜன் கொலுமண்டபம்

காலம் : முற்பகல்.

நடிகர் : ஒட்டக்கூத்தர், புகழேந்தியார், சோழராஜன், குயவன், அம்பட்டன், கொல்லன், வேளாளன் முதலியோர்.

[சோழ மகாராஜன் கொலுவீற்றிருக்கிறுன். ஒட்டக்கூத்தர் சிறைப்பட்டவர்களை அழைத்துக் கேள்வி கேட்கிறுர்.]

**ஒட்டக்கூத்தர் :**—(குயவனைப் பார்த்து)

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
ஆனை முன்வந்து எதிர்த்தவன் ஆரடா ?

**குயவன் :**

கூனையும், குடமும், குண்டு சட்டியும்,
பானையும், டண்ணும் அங்குசப் பயல்யான.

**ஒட்டக்கூத்தர் :**—(நாவிதனைப் பார்த்து)

விண்டட்ட கொக்குவல் லூறுகண் டென்ன [விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின் றுய்பொட்டை [யாய்! புகலாய்.

**நாவிதன் :**—

கண்பொட்டை யாயினும் அம்பட்டன் நான்கவி [வாணர்முன்
பண்பட்ட செந்தமிழ் நீயும் திடுக்கிடப் பாடுவனே.

**ஒட்டக்கூத்தர் :**—(கொல்லனைப் பார்த்து) நீ யார் ? உன் நாமம் ஏது ? புகல்.

**கொல்லன் :—**

செல்வன் புதல்வன் திருவேங் கடவன் செகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொல்லு வோரைக் குறடு
[கொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்டம் ஆட்டிப் பகைவர்
[முன்னே,
அல்லும் பகலும் அடிப்பேன் கவி இரும்பு ஆணி
[கொண்டே.

**ஒட்டக்கூத்தர் :—**(வேளாளனைப் பார்த்து) கவிச்சக்ரவர்த்தியாகிய என் முன், நீயுமா கவிபாட வந்தனை? என்ன விந்தை! இது தகுதியோ?

**வேளாளன் :—**

கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர்; கோகனதப்
பூக்கண்டு கொட்டியும் பூவாது ஒழிந்தில; பூதலம்வாழ்
காக்கின்ற மன்ன! கவிஒட்டக் கூத்த! நின் கட்டுரையாம்
பாக்கண்டு ஒளிப்பர்க ளோதமிழ் பாடிய பாவலரே.

[இவ்வாறு இவர்கள் கவிகளின் மூலமே விடை இறுத்தமையறிந்த ஒட்டக் கூத்தர், அவர்கட்கு வெகுமதி ஈந்து, சிறைவீடுசெய்து அனுப்பினர். புகழேந்தியாரும் இராணியாருடைய முயற்சியினால் விடுதலை பெற்றார். அதன்பின் கூத்தரும் புகழேந்தியாரும் பகைமையின்றி நட்புப் பூண்டு அன்புற்று இன்புற்று இருந்தனர்.]

அருஞ் சொற்கள் :

அவைக்களம் - அரசசபை, கோரம் - சோழநாட்டுக் குதிரை, கனவட்டம் - பாண்டிய நாட்டுக் குதிரை, ஆர் - ஆத்தி, (இது சோழர்க்குரிய மாலை) வேம்பு - வேப்பமாலை (இது பாண்டியர்க்குரியது) ஆதித்தன் -

சூரியன், (சோழர் சூரியகுலத்தவர்) அம்புலி-சந்திரன் (பாண்டியர் சந்திர குலத்தவர்) மன்னவன் - பாண்டியன், புலிக்கொடி சோழர்க்குரியது, மீன்கொடி பாண்டியர்க்குரியது. உறந்தை - உறையூர் (சோழநாட்டுத் தலைநகர்.) கொற்கை பாண்டியநாட்டுத் தலைநகர், முனிவன் - அகத்தியன், நேரி - சோழநாட்டில் உள்ள மலை. கடிப்பகை - வேம்பு, தாதகி - ஆத்தி, அம்கண்ணி - அழகிய மாலை, பரவை - கடல், பகர்வு- சொல்லுதல், அரிது - கடினம், வழுதி - பாண்டியன் வாணிதாதர் - ஒட்டக்கூத்தர், சிறைக்கூடம் - சிறைச் சாலை, கான் - காடு, கலை - ஒலிக்கும், சுறவம் - சுறு மீன், தார் - மாலை, முத்தமிழ் - இயல், இசை, நாடகத்தமிழ், மும்மதம் - கன்ன மதம், கபால மதம், பீஜமதம், அங்குசப் பயல் - அழகிய குயவர் குலச் சிறுவன், யானையை அடக்கும் அங்குசம் ஏந்திய சிறுவன், நாவிதன் - அம்பட்டன், விண் - ஆகாயத்தில், வல்லூறு - பருந்து, விலவிலக்க - நடுங்க, நாமம் - பெயர், ஏது - என்ன, புகல் - சொல், அல்- இரவு, கவி - பாட்டு, விந்தை, ஆச்சரியம், கோ - அரசர், குரை - ஒலிக்கும், கோகனதம் - தாமரை மலர், இறுத்தமை - கூறியதை, சிறைவீடு - சிறையிலிருந்து விடுதலை.

## கேள்விகள் :

1. சோழன் சிறப்பை ஒட்டக்கூத்தர் எப்படிப் புகழ்ந்தனர் ?
2. புகழேந்தியார் பாண்டியனை எங்ஙனம் சிறப்பித்தனர்.
3. ஒட்டக்கூத்தர் தம்மைப் புகழேந்தியாரினும் சிறந்தவர் என்பதை எப்படிக் கூறினர் ?

4. ஒட்டக்கூத்தர் வாக்கைக்கொண்டே புகழேந்தி யார் எவ்விதம் ஒட்டக்கூத்தரை அடக்கினர்?
5. சிறையில் யார் யார் அடைப்பட்டிருந்தனர்?
6. குயவன் பேச்சில் அடங்கிய சிலேடைப்பொருள் யாது?
7. நாவிதன் தந்த விடை யாது?
8. கொல்லன் கூறிய பதில் என்ன?,
9. வேளாளன் விடுத்த விடை யாது?
10. சந்திரன் எப்படிச் சிவன் முடியில் ஏறினன்?

பயிற்சி :

1. மதுரையில் நடந்த திருவிளையாடலுள் மூன்றைக் குறிப்பிடு.
2. திருமால் மச்சாவதாரம் எடுத்த வரலாற்றைக் கூறு.
3. பரவை பணிந்தது, கரை எதிரல்—இவற்றில் அடங்கிய வரலாற்றைக் கேட்டு எழுது.
4. வேளாளன் எடுத்துக்காட்டிய உவமைகளைக் கூறு.

இலக்கணம் :

## உவமையணியும் உருவக அணியும்

### 'உவமையணி'

ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளோடு ஒப்புமை மையக் கூறுவது உவமையணி. (உ-ம்) பால்போலும் வெண்ணிலா. இவ்வுவமையணியில் உபமானம் உபமேயம், உவம உருபு, பொதுத்தன்மை ஆகிய நான்கு உறுப்புக்கள் இருக்கும். உவம உருப்பும் பொதுத்தன்மையும் மறைந்தும் இருக்கும்.

| | |
|---|---|
| பால் | — உபமானம் |
| நிலா | — உபமேயம் |
| வெண்மை | — பொதுத்தன்மை |
| போலும் | — உவம உருபு. |

(உருவக அணி)

உபமான உபமேயங்களுக்குள்ள வேறுபாட்டை நீக்கி, அவ்விரண்டும் ஒன்றே என்று உபமானத்தின் இயல்பை உபமேயத்தில் ஏற்றிக் கூறுவது, உருவக அணியாம்.

(உ - ம்) முகத்தாமரை. இங்கு முகமே தாமரையாகக் கூறப்பட்டிருத்தலின், உருவக அணியாயிற்று.

பயிற்சி :

1. பால்போல் இன்சொல், பவழம்போன்ற வாய், தாமரை போன்ற கை. மீன் அன்ன கண். உடுக்கையிடை, மேகக்கூந்தல், வில் புருவம்— இவை எப்படி உவமை அணிக்கு உதாரணம் ஆயின என்பதைக் கூறு.
2. கைம்மலர், அடித்தாமரை, முகமலர் கண்குவளை. —இவை எப்படி உருவகமாயின என விளக்கு.
3. இப்பாடத்தில் வந்துள்ள பாடல்களிலிருந்து உவமையணி, உருவக அணிகள் இருப்பின் அத்தொடர்களை எடுத்துக்காட்டு.

# I. நீதிப் பாக்கள்

## நீதிநெறி விளக்கம்.

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்,—நவையஞ்சி,
ஈத்துண்ணார் செல்வமும், நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. 1.

வருந்தித்தாம் கற்றன ஓம்பாது, மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்,—கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச், சொரிந்திட், டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். 2.

ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப;—தூக்கின்,
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு. 3.

பிறரால் பெரிஞ்சுட்டு வேண்டுவான், யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு— பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச், சிறுமை புறங்காத்து,
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல். 4.

உறுதி பயப்பக் கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப;—இறுமுயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால்; அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில. 5.

—குமர குருபரசுவாமிகள்.

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் குமரகுருபரர். இவர் திருநெல்வேலியைச் சார்ந்த ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் சைவவேளாள மரபில் பிறந்தார். இளமையில் ஐந்து வயது வரை ஊமையாக இருந்து, பிறகு திருச்செந்தூர் முருகன் அருளால் அது நீங்கப்பெற்றார். இவர் கந்தர் கலிவெண்பா, சகல

கலாவல்லி மாலை, மீனாட்சியம்மன்பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம் முதலான நூல்களைப் பாடியுள்ளார். இவர் 300 வருடங்களுக்குமுன் இருந்தவர். இவர் ஆசிரியர் மாசிலாமணி தேசிகர். இவர் காலத்தில் திருமலை நாயகர் மதுரையில் ஆண்டுவந்தார். அவர் வேண்டுகோளுக்கு இணங்கியே நீதிநெறிவிளக்கம் பாடினார்.

அருஞ் சொற்கள் :

1. அவை - சபை, மெய் - உடல், விதிர்ப்பார் - நடுங்குவார், ஆகுலச்சொல் - ஆரவாரச்சொல், நவை - குற்றம், ஈந்து - கொடுத்து, நல்கூர்ந்தார் - ஏழைகள், இன்னலம் - கொடைக்குணம், பூத்தலின் - தோன்றுவதைவிட. 2. ஓம்பாது - காப்பாற்றாது, பரிந்து - வருந்தி, கருந்தனம் - செல்வம், உய்த்து - கொண்டு சென்று, அரிப்பரித்து - சல்லித்து, எய்த்து - இளைத்து. 3. ஆக்கம் - கல்வி, செல்வம், ஒழுக்கம் முதலியவற்றால் உயர்ந்து, மீச்செலவு - வரம்பு கடந்ததீய நடத்தை, நனி - மிகவும், துலை - தராசு. 4. சுட்டு - புகழ், யாண்டும் - எவ்விடத்தும், நோற்பது - விரதமாகக் கொள்ளவேண்டுவது, சிறுமை - தீய குணம், புறங்காத்து - வெளியில் எடுத்துக்கூறாமல். 5. உறுதி - நன்மை, பயப்ப - கொடுக்கக்கூடிய செயல்கள், கடைபோகவேனும் - முடியாமற் போயினும், இறுவரைகாறும் - அழியும் காலம் வரையிலும், அல்லன - நடவாதன.

கேள்விகள்

1. எவை பூத்தலில் பூவாமை நன்று?
2. கற்றவற்றைக் காவாது மேலும் கற்றற்குக் கொடுக்கப்பட்ட உவமை யாது?

3. ஆக்கம் பெரியார், என்னும் பாட்டின் கருத்து யாது?
4. இப்பாட்டின் உபமான உபமேயங்களைக் குறிப்பிடு.
5. உலகில் புகழுடைய வழியாது?
6. நல்லகாரியத்தை எப்படிமுடிக்கவேண்டும்? ஏன்?

பயிற்சி

1. பிரித்துக்காட்டு. ஈத்துண்ணூர், அரிப்பரித்தாங்கு.
2. பிறரால், பூத்தலின், உயிர்க்கு,—இச்சொற்களில் உள்ள வேற்றுமைகளை எடுத்துக் காட்டு.
3. பூவாமை நன்று, வலிதன்றே தாழும், நோற்ப தொன்றுண்டு, ஆவனவும் உண்டு, ஒழுக்கல் தீதன்றூல்-இத்தொடர்கட்கு—எ. ப. செ. கூறு.

## 2. ஆத்திசூடி வெண்பா

காலைதுயில சீலம்போம்; கண்டபகல் ஆக்கம்போம்;
மாலைதுயில் நோயாம்; வகையறிந்து—ஞாலமதில்
புண்ணியகா லம்தெரிந்தே, புன்னைவன நாதா!
எண்ணி அனந்தலா டேல்.

நித்தியத்தைக் கேட்கப்போய், நித்திரை என்றேகுழறிப்
புத்தியற்ற கும்பகர்ணன் பொன்றினன்பார்,—மத்தமத
குன்றம்போல் புன்னைவனக் கொற்றவா! பாகைமன்ன!
என்றும்சொற் சோர்வு படேல். 2

நாடோடும் போது, நடுவோட வேண்டுமென்று,
தேடும் தருமர்சொன்ன சீரதனால்—நீடு
பொருந்துபுகழ் புன்னைவன பூபாலா! நன்றாய்த்
தெரிந்துநா டொப்பன செய். 3

அருமறையர் வேள்வி தனில்சிசுபா லன்பார்த்
தரிமையறிந்தை சொல்லி அழிந்தான்;—தெரிவதன்றோ?

பார்புகழும் புன்னைவனப் பார்த்திபா! மேலோரைச்
சீர்தப்பி வெட்டெனப்பே சேல். 4

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும்; ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்தென்—றெழுசொலப்பார்
தூயபுகழ் புன்னைவனத் தோன்றலே! சொப்பனத்தி
லேயுமொன் றுரைத்தே றல். 5

அருஞ் சொற்கள் :

இந்நூலாசிரியர் வரலாறு அறிதற்கில்லை.

1. சீலம் - ஒழுக்கம், ஆக்கம் - செல்வம், ஞாலம் - உலகம், அனந்தல் ஆடேல் - வேளையல்லா வேளையில் உறங்காதே. 2. பொன்றினன் - அழிந்தான், மத்தம் - மத்தகம், மதகுன்றம் - யானை, புன்னைவனநாதன் - ஒரு வள்ளல், இவன் வேண்டுகோளால் இந்நூல் பாடப்பட்டது, கொற்றவா - தலைவா, பாகை - தலைப்பாகை. 3. நாடு - நாட்டில் உள்ள மக்கள், பூபாலா - மன்னா. 4. வேள்வி - யாகம், பார் — உலகம், பார்த்திபா - அரசனே, வெட்டென - கத்தி வெட்டுப்போல. 5. படை - ஆயுதம், ஒன்னார் - பகைவர், தூய - சுத்தமான, தோன்றலே - மன்னனே, சொப்பனம் - கனவு.

கேள்விகள் :

1. எவ்வெவ்வேளைகளில் உறங்குதல்கூடாது? ஏன்?
2. கும்பகர்ணன் ஏன் அழிந்தான்?
3. தருமர் சொன்ன சொல் யாது?
4. ஏன் வெட்டெனப் பேசுதல் ஆகாது?
5. ஒன்னார் அழுத கண்ணீருக்கு உவமை யாது?

பயிற்சி:

1. "ஆத்திசூடி வெண்பா" என இந்நூல் பெயர் பெற்றதற்குரிய காரணத்தைப் புலப்படுத்து.
2. இதில் காணப்படும் ஆத்திசூடி வாக்கியங்களை எடுத்து எழுது.
3. சிசுபாலன் அழிவு, கும்பகர்ணன் அழிவு, நாடு ஓடுகையில் நடுவு ஓடியது-இக்கதைகளை எழுது.
4. 'தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்' என்பதற்கு ஏற்ற கதை ஒன்றைக் கேட்டு எழுது.
5. புன்னைவன நாதனைப்பற்றி இங்குள்ள பாடல்களில் இருந்து, நீ அறிந்தவற்றைத் தொகுத்துக் கூறு.
6. வேறு ஐந்து ஆத்திசூடி வாக்கியங்களை எடுத்துக் காட்டு.

## 3. சதகம்

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலும்
குலமுழுதும் நன்மை யுண்டாம்;
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறுபெற்றும் ஆவ துண்டோ?
மன்றில்நடம் புரிவாரே! தண்டலையா
ரே! சொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல ஈன்றுமென்ன! குஞ்சரமொன்
றீன்றதனால் பயனுண்டாமே! 1

பணந்தானே யறிவாகும்; பணந்தானே
வித்தையுமாம்; பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும்; பணமில்லா
தவர்பிணமாம் பான்மை சேர்வர்;

பணந்தானே பேசுவிக்கும்; தண்டலை நீள்
நெறியாரே! பார்மீ திலுன்
பணந்தானே பந்தியிலே! குலந்தானே
குப்பையிலே படுக்குந் தானே. 2

—படிக்காசுப்புலவர்.

## ஆசிரியர் வரலாறு

படிக்காசுப் புலவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்பு தென்களந்தை என்னும் ஊரில் செங்குந்தர் மரபில் சைவசமயத்தில் பிறந்தவராவர். இவர் கல்வி அறிவில் தேர்ந்து ராமநாதபுர மகாராஜாவான ரகுநாத சேதுபதிஅவர்கள் இருந்த காலத்தில் அவர் சமஸ்தான வித்துவானாக இருந்தவர். இவர் சந்தப்பாப் பாடுவதில் வல்லவர். இவர் பாடிய நூற்கள் தொண்டை மண்டல சதகம், தண்டலையார் சதகம் முதலியன. இவர் சீதக்காதி என்னும் முஸ்லீம் வள்ளல்பால் மிகுந்த அன்பு கொண்டவர். அவ்வள்ளல் இறந்தபோது இவர் பாடிய பாடல்கள் நெஞ்சை உருக்கும் தன்மையை யுடையன.

### அருஞ் சொற்கள்:

1. மன்றில் - சிதம்பரப் பொற்சபையில், நடம் - நடனம் ஈன்று - பெற்று, குஞ்சரம் - யானை, 2. பரிந்து - வருந்தி, பான்மை - தன்மை, பார் - பூமி.

### கேள்விகள்:

1. குலம் எப்பொழுது சிறக்கும்?
2. பலபிள்ளைகளைப் பெறுவதிலும் ஒருநல்லபிள்ளை பெறுதலே சிறந்தது என்பது, எந்த உதாரணத்தால் விளக்கப்பட்டுள்ளது?

3. 'பணந்தானே அறிவாகும்' என்னும் பாட்டில் அமைந்துள்ள பழமொழி யாது?

பயிற்சி:

1. 'குஞ்சரம் ஒன்று ஈன்றதனால் பயனுண்டாமே' இதிலிருந்து நாம் யானையின் சிறப்பை உணரக் கூடிய பழமொழி ஒன்றைக் குறிப்பிடு.
2. பணத்தின் பெருமையைக் குறித்து ஒரு கட்டுரை எழுது.
3. பிரித்து எழுது: குலமுழுதும், அறிவில்லாத ஆவதுண்டோ, குஞ்சரமொன்றீன்றதனால், பார் மீதிற்றான்.

## ரூபாயின் கதை—(கும்மி)

வெள்ளிமலையிலே நான் பிறந்தேன்—அங்கே
மின்னொளி பெற்று வளர்ந்து வந்தேன்;
அள்ளியரித் தென்னை வாரி வந்தே—பல
ஆறுகள் மண்ணில் விடுத்த அம்மா! 1

மண்ணில் மறைந்து மகிழ்வொடு-வாழுமென்
மாயமுணர்ந்த மன்ன ரெல்லாம்!
கண்ணியமாகத்தம் முத்திரை யிட்-டென்னைக்
காமதேனு வாகப் போற்றினரே. 2

முத்திரை பெற்றதும் புத்துயி-ரோடுநான்
முன்னில்லா நாதமுங் கொண்டே னம்மா!
இத்தரை யெங்கும் கறங்கிடவே—எனக்
கீசன் நல்லருள் சுரந்தா னம்மா. 3

உழுதிடு முழவன் கண்டெடுத்தே—வீட்டில்
உள்ளேயோர் மூலையில் கொண்டு வைத்தான்;

மெழுகிடும் வேளை யவன் மனைவி—கண்டு
விரைவா யெடுத்து முடிந்து கொண்டாள். 4

வந்த வலைஞன் மனைவியிடம்—அவள்
வாங்கிய மீனுக்கெனை யளித்து விட்டாள்;
அந்த வலைஞன் மனையிற் கிடந்து-நான்
அங்கமெல்லாம் நாறிப் போனே னம்மா! 5

மங்கை மணத்திற்கா அம்மாது-மென்னை
மலர்கள் வாங்கக் கொடுத்து விட்டாள்
அங்கே அப்பூக்கடை தன்னிருந்தே—நான்
அளவிலா இன்ப மடைந் தேனம்மா! 6

பூக்கடைக் காரன் குடித்துவிட்-டென்னையும்
புழுதியில் வீசி யெறிந்து விட்டான்;
ஊக்கமுடன் செட்டியணைத் தெடுத்தே—உடன்
ஓர் பையி லேயிட்டுக் கட்டி வைத்தான். 7

தஞ்ச மடைந்த பையிலிருந்தே—யான்
தயங்கி மூச்சுத் திண றயிலே,
வஞ்சியிலிட்டுச் சிறைப் படுத்தி—என்றன்
வாழ்வைக் கெடுத்தா ரவ்வணிகருமே. 8

காற்று மொளியு மிலாமலங்-கென்னுடல்
களிம்பு பற்றிக் கறுத்த தம்மா!
போற்றும் பொறுமைக் கிரங்கிடக்-கள்ளனும்
பூட்டிய பூட்டை யுடைத்தனனே. 9

உண்ணு முணவுமே நானாவேன்;—என்றும்
உடுக்கு முடையுமே நானாவேன்;
கண்ணுங் கருத்துங் களித்திடவே—சிறார்
கையமர் பொருட்களும் நானாவேன். 10

ஏழை யெளியவர்க் கிரங்கிடுவேன்;—விடா
தென்றும் முயல்பவர்க் குதவிடுவேன்;
வாழையடி வாழை யாகவே—இந்தியா
வாழ்ந்திடத் தொண்டுகள் செய்திடுவேன். 11

—வித்துவான் உமைதாணுப் பிள்ளை

அருஞ் சொற்கள்

கண்ணியமாக-சிறப்பாக, காமதேனு-தெய்வலோகப் பசு, நாதம் - ஓசை, தரை - பூமி, சுறங்கிட - சுற்ற, வலைஞன்-செம்படவன், மனை - வீடு, அங்கம், உடம்பு நாறிப்போனேன் - புலால் நாற்றம் வீசப்பெற்றேன், மணத்திற்காக - கலியாணத்திற்காக, புழுதி - மண், ஊக்கமுடன் -மன எழுச்சியுடன், தஞ்சம் - அடைக்கலம், வஞ்சி - பெண், சிறார் - சிறுபிள்ளைகள்.

கேள்விகள் :

1. வெள்ளி எப்பொழுது செலாவணியாகப் பயன் படுகிறது ?
2. ரூபாய்க்கு ஈசன் சுரந்த அருள் யாது ?
3. ரூபாய் புலால் நாற்றம், நன்மணம் எவ்வெப் பொழுது பெற்றது? இதனால் ரூபாயைக் குறித்து என்ன உணர்கின்றீர்கள் ?
4. ரூபாயின் வாழ்வு எப்பொழுது கெடுகிறது?
5. ரூபாய் எப்பொழுது மூச்சுத்திணறி வருந்தியது?
6. ரூபாயின் சிறை யாரால் நீக்கப்பட்டது ?
7. சிறை நீக்கத்திலிருந்து நீங்கள் என்ன அறிகின்றீர்கள் ?
8. ரூபாய் எவ்வெவ்வாறு பயன் படுகிறது?
9. ரூபாய் யாருக்கு உதவி செய்யும் ?

பயிற்சி :

1. ரூபாய் தன் வரலாற்றை உங்களுக்குச் சொல் வது போல் ஒரு கட்டுரை எழுது.
2. ரூபாயின் சிறப்பு என்பது பற்றி ஒரு வியாசம் எழுது.
2. 'காமதேனு' என்பதைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.
3. 'வாழையடி வாழையாக' என்னும் தொடர் ரூபாய் வரலாற்றுக்குப் பொருத்தமான உவமை என்பதை விளக்கிக் காட்டு.
4. பிரித்து எழுது:— மின்னொளி, விடுத்தவம்மா, நல்லருள், புத்துயிர்.

## III. தனிப்பாடல்கள்

பெருமாளு நல்ல பெருமா; ளவர்தந்
திருநாளு நல்ல திருநாள்;—பெருமாள்
இருந்திடத்திற் சும்மா யிராமையி னாலேயோ!
பருந்தெடுத்துப் போகிறதே பார். 1

முன்னே கடிவாள மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள,—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போங் காத வழி. 2

—காளமேகம்.

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்க முரைக்கக்கேள்:—அண்டி
நெருக்குண்டேன்; றள்ளுண்டே; னீள்பசியி னாலே,
சுருக்குண்டேன்; சோறுண்டி லேன். 1

வேழ முடைத்து மலைநாடு; மேதக்கச்
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்,

தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து. 2

—ஔவையார்.

## ஆசிரியர் வரலாறு

காளமேகப் புலவர் கும்பகோணத்தில் வைஷ்ணவ அந்தணர் குடியில் பிறந்தவர். இளமையில் இவருக்கு வரதன் என்பது பெயர். பின்னால் அகிலாண்ட நாயகியின் அருள் பெற்று, மழைபோல் கவிகளைப் பொழிந்ததனால், காளமேகம் என்னும் பெயர் பெற்றார். இவர் திருமலைநாயகர் காலத்துப் புலவர். இவர் பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளார். அவை அனைத்தும் நகைச்சுவை பயக்க வல்லனவாய்த் திகழும். இவர் நூல்வடிவில் செய்தவை திருவானைக்கா உலா, சித்திரமடல், பரப்பிரம்ம விளக்கம் என்பன. இங்குள்ள முதற்பாடல் இவர் காஞ்சிபுர வரதருடைய கருடசேவையின் போது நிந்தாஸ்துதியாக இவரால்பாடப்பட்டது. இரண்டாவது பாடல் விகடராமன் ஏறிவந்த குதிரை எத்தனைபேர் தள்ளினால் மெல்ல நடந்து சென்றபோது பாடப்பட்டது.

ஔவையார் பெண்பாற்புலவர்களில் தலை சிறந்தவர். இப்பெயர் கொண்ட மூன்றுபேர் இருந்ததாகவும் கூறுவர். இவர் பாணர்குடியில் வளர்ந்தவர். விநாயகர் அருள் பெற்றவர். இவர் பாடிய பாடல்கள் பலவாகும். அவை சங்க இலக்கியங்களிலும் தனிப்பாடல் திரட்டிலும் காணப் படுகின்றன.

முதற்பாடல் இவ்வம்மையார் பாண்டிய நாட்டுமன்னன் திருமணத்திற்குச் சென்று மீண்டதும், "திருமணச் சிறப்பைக்கூறுக" என்றபோது பாடியபாடலாகும். இரண்

டாவது பாடல் தமிழ் நாட்டில் உள்ள நான்கு பெருநாடு களின் தனிச்சிறப்பை விளக்கக் கூறப்பட்டதாகும்.

## அருஞ் சொற்கள்

காதம் - பத்துமைல், வழுதி - பாண்டியன், வேழம் - யானை, மலைநாடு - சேரநாடு, பூழியர்கோன் - பாண்டியன், சான்றோர் - அறிஞர்.

## கேள்விகள்

1. "பருந்தெடுத்துப் போகின்றதே பார்!" இதில் அமைந்த நகைச்சுவை யாது?
2. விகடராமன் அந்தணன் என்பது எப்படித்தெரிகிறது?
3. ஔவையார் உண்டவை எவை? உண்ணாதது எது?
4. நால்வகைநாடுகளின், தனித்தனிச் சிறப்பு யாது?

## பயிற்சி

1. நால்வகை நாடுகள், அவற்றையாண்ட மரபினர்—இன்னார் எனக்குறிப்பிடு.
2. வழுதி கலியாணச் சிறப்பினைக் குறிப்பிடு.
3. விகடராமன் குதிரை வேகமாகச் செல்ல மேற்கொண்ட முயற்சிகளைப் புலப்படுத்து.